# இலக்கு

இதழ் 62

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஜனவரி 26, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## பிரபாகரன் சட்டகம்: விடுதலைப் புலிகளின் உத்திகள்

சேது ராமலிங்கம்

நேர்காணல்

## தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவுக்கு விட்டுக்கொடுப்புகள் அவசியம்



வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா



## கல்வி அபிவிருத்தியில் பிராந்திய சமமின்மை

**மோஜிதா பாலு** கிழக்குப் பல்கலைக்கழகம்.

## ஒரு தசாப்தத்தை கடந்து....


ராஜி பற்றர்சன்





## மீண்டும் முடியை மாற்றுவாரா புட்டின்?

வேல் தர்மா




தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

# தெற்கு வேல்ஸ் தமிழர் சங்கமமாகி கொண்டாடும் தைப்பொங்கல் விழா.



தமிழ் தேசியக் கல்விக்கூடம் வேல்ஸ், காடிவ் தமிழ் மன்றம், தமிழ்க் கலை பண்பாட்டுக் கல்விக்கூடம் வேல்ஸ் சமூகங்கள் இணைந்த தமிழ்ச் சமூகத்தின் பொது தளமே தமிழர் சங்கமம் வேல்ஸ்.

புலம் பெயர்வு தமிழ் மொழி பண்பாடுகளை படிப்படியாக தலைமுறைகளிடமிருந்து அகற்றிவிடும் என்ற யதார்த்தத்தை மாற்றும் விதமாக தெற்கு வேல்ஸ் தமிழர்கள் தமிழ் மொழி பண்பாடுகளை பேணுகிறார்கள். இளம் தலைமுறையினருக்கு தமிழின் செழுமையை இலக்கிய முதிர்ச்சியை இயல், இசை, நாடக நிகழ்வுகள் ஊடாக வளர்த்து திருக்குறள், பேச்சு போட்டிகள் என நடாத்தி சான்றிதழ்கள் வழங்கி சாதனைகள் படைத்துள்ளார்கள் இங்குள்ள மக்கள்.

தைப்பொங்கல், கண்கட்டி உறி உடைத்தல், மாட்டுக்கு பொட்டு வைத்தல், பொது அறிவுப் போட்டி: இசைப் பாடல். நாடகம் என களைகட்டியது விழா. தமிழ் பண்பாட்டு உடைகளில் பிள்ளைகளும் பெற்றோரும் பெருமையுடன் வலம் வருவதும் எமது உணவு வகைகளைப் பரிமாறுவதும் விழாவின் சிறப்பம்சமாக உள்ளது.

அனைத்து மக்களதும் பங்குடன் உருவாக்கப்பட்டுள்ள "வேல்ஸ் தமிழர் சங்கமம்"; எனும் அமைப்பு ஊடாக தமிழர் தேசிய நினைவு நாட்களான மாவீரர் நினை வேந்தல், முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல், தமிழ்ப் பொதுப் பெருவிழாவான தைப் பொங்கல், போன்றவற்றைக் கொண்டாடுவது வழமையாகி வருகிறது.

தமிழின் எழுச்சியும் வளர்ச்சியும் தமிழ்ச் சங்கம் வளர்த்ததால் உயர்வு கண்டது. தமிழின் உயிர்ப்பும் பண்பாட்டுச் சிறப்பும் தொடர்ந்து பேணப்பட வேண்டுமானால், தமிழ் இயல், இசை , நாடக, மேடைகள் பேணப்பட வேண்டும் என்ற உண்மை உணரப்பட்டது. எமது இனம் நிலைத்து வாழ வேண்டுமானால் மொழியின் பெருமையை வெளிக்கொணரும் கலைகள் உயிர்வாழ வேண்டும். கலை உயிர் பெற வெண்டுமானால் கலை அரங்கங்கள் திறக்கப்பட வேண்டும்.

செந்தமிழ் இங்கு பிறந்து வாழும் பிள்ளைகளின் நாவில் தேன் சொட்டும்படியாக விளையாடும் காட்சிகள் அடங்கிய சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதியை தமது நாடகத்தில் தமிழ் கலை பண்பாட்டுக் கல்விக்கூடம் வேல்ஸ் மாணவர்கள் தமது பத்தாவது ஆண்டு விழாவில் மேடையேற்றினார்கள். இது தெரிவுக்குள்ளாகி லண்டன் சொயாஸ் பல்கலைக்கழக தமிழ் பீடத்தின் அழைப்பில் மீண்டும் மேடையேறவுள்ளது.




இலக்கு நோக்கிய தமிழரின் அடிப்படை வேலைத்திட்டமாக மொழி, கலை, பண்பாட்டுப் பேணலை வேல்ஸ் பிள்ளைகள் ஈடுபாட்டுடன் செய்து வருவது பெரும் ஆர்வத்துக்குரிய செயலாக நோக்கப்படுகிறது. இந்த தமிழர் சங்கமம் போன்ற அமைப்புக்கள் புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியலில் இன்றியமையாத தேவையாகிறது. ஏனைய பகுதிகளிலும் இந்தச் செயற்பாடுகள் முனைப்புப்பெற வேண்டும்.

# நிதி நெருக்கடியில் ஐ.நா

## மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகளும் பாதிப்பு



ஐக்கிய நாடுகள் சபை தற்போது மிகப்பெரும் நிதி நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்த நெருக்கடி அதன் நாளாந்த செயற்பாடுகளை பாதிப்பதுடன், ஜெனீவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளையும் பாதிக்கும் என தெரிவிக்கப் படுகின்றது.

நிதி நெருக்கடி காரணமாக ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின்கூட்டத்தொடரின்பணிநேரம் குறைக்கப்படவுள்ளது. சில கூட்டத் தொடர்கள் நிறுத்தப்பட்டவுள்ளன, பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதுடன், உலகில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஐ.நா சிறப்பு பணியாளர்களின் பணிகளும் இடை நிறுத்தப்படவுள்ளதாக ஐ.நா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மனித உரிமை செயற்பாட்டு நிபுணர்களின் பிரயாண கொடுப்பனவுகள் 25 விகிதம் குறைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அமைப்பின் உடன்பாட்டு நடவடிக்கை பிரிவின் தலைவர் கெயில் வாட் தெரிவித்துள்ளார்.

பணியாளர்கள் குறைக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த வருடம் பல கூட்டங்கள் நிறுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நீதிமன்றத்தின் (ICJ-International Criminal Court) ரொகிங்யா தீர்ப்பு



ரொகிங்யா இனவழிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மியன்மார் எடுக்க வேண்டும் என்று உலகின் உச்ச நீதிமன்றமான ஹேக்கில் உள்ள சர்வதே நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஏகமனதாக தீர்ப்பளித்துள்ளனர்.

ஆபிரிக்காவின் சிறிய நாடான கம்பியா, சர்வதேச நீதிமன்றத்தில் 2019இல் மியன்மாருக்கு எதிராக கொண்டு வந்த வழக்கின் தீர்ப்பின் முதலாவது கட்டமாக இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்புக்கு இணங்க மியன்மார் எடுக்கும் நடவடிக்கைகளை பற்றிய அறிக்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு நான்கு மாதங்களில் மியன்மார் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இத்தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தில் ரொகிங்யா இனவழிப்பு தீர்ப்பு பற்றிய விசாரணைகளை தொடரும். இதன் முடிவுகள் வர பல ஆண்டுகள் எடுக்கலாம். இதற்கான ஆதாரங்களை மியன்மார் பாதுகாக்க வேண்டும் என்றும் சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இனவழிப்பு ஒப்பந்தத்தில் (Gencide Convention) கையெழுத்திட்ட எந்த நாடும் இனவழிப்பு செய்யும் ஒரு நாட்டுக்கு எதிராக இப்படியானதொரு வழக்கை சர்வதேச நீதிமன்றத்தில் கொண்டு வரலாம். இந்த வழக்கில் ஈடுபட்ட Global Justice to Protect என்ற அமைப்பின் தலைவர் சைமன் அடம்ஸ் அல்ஜீராவுக்கு கொடுத்த நேர்காணலில் இந்த வழக்கை சர்வதேச நீதிமன்றத்தில் கொண்டு வருவதற்கு வேறு எந்த நாடும் முன்வராத போது கம்பியா என்ற சிறிய ஆபிரிக்க நாடு முன்வந்தது என்று பாராட்டினார்.

சமாதானத்திற்கான நோபல் பரிசை பெற்ற ஆங் சாங் சூகி அவருடைய நாடான மியன்மாரின் இராணுவத்திற்கு ஆதரவாக கொடுத்த வாக்குமூலங்களை சர்வதேச நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளில் மியன்மாரால் முன்மொழியப்பட்ட நீதிபதியும் இத்தீர்ப்புக்கு ஆதரவாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏகமனதாக எடுக்கப்பட்ட இத்தீர்பை அழித்த 17 நீதிபதிகளில் சீனா மற்றும் ரஷ்ய நாட்டை சேர்ந்த நீதிபதிகளும் இருந்தனர்.

இத்தீர்ப்பை அமுல்படுத்தும் அதிகாரம் சர்வதேச நீதிமன்றத்திற்கு இல்லையெனினும், அமுல்ப்படுத்தும் அதிகாரமுள்ள ஐ.நா பாதுகாப்பு சபையில் இனியும் மியன்மாருக்கு எதிரான தீர்ப்புக்களை பாதுகாப்பு சபையில் உள்ள சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் தடுக்க (veto) முடியாது என்ற கருத்தை பலரும் முன்வைக்கிறார்கள்.

இருப்பினும் இம்மாதிரியான ஒரு தீர்ப்பு சிறிலங்கா போன்ற மேற்குலக நட்பு நாடொன்றிக்கு எதிராக கொடுக்கப்படுமா என்ற சந்தேகம் பலருக்கு உண்டு என்பதையும் கவனிக்க வேண்டும்.

ரொகிங்யா மக்கள் தீவிர ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்காததும், சுய நிர்ணய அரசியல் தீர்வு ஒன்றை இவர்கள் முன்வைக்காததும் சர்வதேச இத்தீர்ப்புக்கு ஏதுவாக இருந்தது என்று பலர் கருதுகிறார்கள்.

ஏறக்குறைய 2 மில்லியன் மக்கள் தொகையுள்ள ரோகிங்யா மக்களில் 1.2 மில்லியன் ரொகிங்யாக்கள் வங்காளத்தில் மோச மான அகதி முகாம்களிலேயே இன்றும் அல்லல் படுகிறார்கள்.

## சிங்களப் பெண்ணின் கழுத்தை அறுத்த சிப்பாயையும் கோத்தபாயா மன்னிப்பாரா?



கடந்த 22ஆம் நாள் யாழ். பண்ணைக் கடற்கரைப் பகுதியில் சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவர் அவரது முன்னாள் மனைவியும், யாழ். மருத்துவ பீடத்தின் இறுதி ஆண்டு மாணவியுமான றோசினி என்பவரை கழுத்தை அறுத்து படுகொலை செய்திருந்தார்.

2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் நாள் யாழ். மிருசுவில் பகுதியில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற 8 தமிழ் மக்களை றோசினியை போலவே சிங்களச் சிப்பாய் ஒருவர் கழுத்தை அறுத்து படுகொலை செய்திருந்தார். கொல்லப்பட்டவர்களில் 4 பேர் சிறுவர்கள்.

எந்தவொரு இராணுவச் சிப்பாயும் தண்டிக்கப்படமாட்டார்கள் என கடந்த வருடம் இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் சிங்கள மக்களுக்கு வாக்களித்த பௌத்த சிங்கள அரச தலைவர், தனது வாக்குறுதியை நிறைவேற்ற தமிழ் மக்களை படுகொலை செய்த சுனில் ரட்நாயக்க என்ற அந்த சிப்பாயை விடுதலை செய்திருந்தார்.

ஆனால் தற்போது எழுந்துள்ள கேள்வி என்னவெனில், சிப்பாய்களை தண்டிப்பதில்லை என்ற கொள்கையை உடைய சிறீலங்கா அரச தலைவர் றோசினியின் கழுத்தை அறுத்த சிப்பாயையும் மன்னிப்பாரா என்பது தான்?

ஆனால் சிறீலங்காவில் தமிழ் மக்களுக்கு ஒரு நீதியும், சிங்கள சமூகத்திற்கு ஒரு நீதியும் நடைமுறையில் உள்ளது என்பது நாம் அறிந்ததே.

## தென்னிலங்கைக்கு யாழ் மரக்கறிகள் விலை குறையும் என எதிர்பார்ப்பு



தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் மரக்கறிகளின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்திருந்தது, ஆனால் தற்போது யாழ்பாணத்திலும், கற்பிட்டியிலும் இருந்து அங்கு செல்லும் மரக்கறிகளால் விலைகள் குறையும் சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளதாக தென்னிலங்கை தகவல்கள் தெரிவித்துள்ளன.

எனினும் சிவப்பு வெங்காயத்தின் விலை தற்போதும் கிலோ ஒன்று 1200 ரூபாய்களாக விற்பனை செய்யப்படுவதாகவும், எகிப்து, பங்களாதேஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் இருந்து கடந்த மாதம் 29,000 தொன் வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்ட போதும், மக்களின் தேவையை அது நிறைவு செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்தி அதிக இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் பலர் விதை வெங்காயத்தை விற்பனை செய்துள்ளதால் எதிர்காலத்தில் விதை வெங்காயத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் ஒரு கிலோ விதை வெங்காயம் 8000 ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்ட போதும், அதன் விலை 13000 ஆக அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இலக்கு

## வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்ட ஈழத்தமிழர் பிரச்சினை அனைத்துலகப் பிரச்சினையாகியது

ஐக்கிய நாடுகள் சபையின் 2010ஆம் ஆண்டின் "எல்லா ஆட்களினதும் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதல் பாதுகாப்புத் தொடர்பான அனைத்துலகமரபுசாசனம்" ஒவ்வொருஅரசையும்தங்கள்எல்லைக்குள்காணாமல் ஆக்கப்படுதல் நடைபெறாதவாறு பாதுகாக்கும் படி வலியுறுத்துகிறது. அத்துடன் காணமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு தங்களின் உறவினர்கள் நிலை குறித்து அறிவதற்கும், நீதி பெறுவதற்கும், நட்டஈடுகள் பெறுவதற்கும் உள்ள உரிமையையும் இந்த அனைத்துலக மரபுசாசனம் உறுதிப்படுத்தியது. 1992ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபையின் "எல்லா ஆட்களினதும் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதல் பாதுகாப்புத் தொடர்பான பிரகடனம்", 1994ஆம் ஆண்டின் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அமெரிக்க மரபுசாசனம், 1998ஆம் ஆண்டின் அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான சட்டவிதி, என்பனவற்றின் அடிப்படையிலேயே இந்த 2010ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபையின் "எல்லா ஆட்களினதும் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதல் பாதுகாப்புத் தொடர்பான அனைத்துலக மரபுசாசனம்" உருவாக்கப்பட்டது.

இந்த மரபுசாசனத்தின்படி காணாமல் ஆக்கப்படுதல் என்பது நேரடியாகப் பாதிக்கப்பட்டவரின் மேலான மனிதஉரிமை மீறலாக மட்டும் அல்லாமல் அவருடைய உறவினரின் மேலான மனிதஉரிமை மீறலாகவும் உள்ளது. இதனாலேயே அனைத்துலச் சட்டங்கள் பாதிக்கப்பட்டவரின் உறவினர்களது உரிமைகளும் பாதிக்கப்பட்டவரின் உரிமைகள் போலவே கருதப்பட வேண்டும் என மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

அனைத்துலகச் சட்டங்கள் இவ்வாறு மிகத்தெளிவாக இருக்கின்ற அடிப்படையிலேயே, 2009ஆம் ஆண்டு இலங்கையில் அரச படைகளிடம் பகிரங்கமாகச் சரணடைந்ததன் பின்னர் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் கடந்த 11 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகத் தங்களின் உறவினர்கள் குறித்து அறிதற்கும், நீதி பெறுவதற்கும், நட்டஈடு பெறுவதற்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மனித உரிமைக் கோரிக்கை விண்ணப்பங்களை முன்வைத்து தங்களின் நீதிக்காவும் மனித உரிமைக்காகவும் போராடி வருகின்றனர். ஆயினும் இவ்வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகம் சிறிலங்கா அரசாங்கத்தின் ஏற்புடன் 2015இல் உருவாக்கிய முறைமைகள்கூட இதுவரை இலங்கையில் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் இவற்றை எல்லாம் கவனத்தில் எடுக்காது, இன்றைய சிறிலங்காவின் அரச அதிபர், சட்டத்தின் ஆட்சிக்கு என்று தங்களைக் கையளித்துச் சரணடைந்த 18000 பேரை, யுத்தத்தின் விளைவாக இறந்தவர்களாகத் திரிபுபடுத்தி, "இறந்தவர்களை என்னால் மீளக் கொண்டுவர முடியாது" என்று மிகவும் அலட்சியமாகக் கூறி, அவர்களுக்கு மரணசான்றிதழ் வழங்கப்படும் எனத் தனது விருப்பை பாதிக்கப்பட்ட உறவினர்கள் மேல் திணித்து, வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர்க்கான நீதியையும் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்க முற்பட்டுள்ளார். இது அனைத்துலகச் சட்டங்களை ஏற்க மறுக்கும் செயலாகிறது.

அத்துடன் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் மனித உரிமைகளை இன்றும் எந்தவிதமான தயக்கமுமின்றி வன்முறைப்படுத்தும், இக் கூற்று, இன்றும் கூட, அனைத்துலகச் சட்டங்களைக் கூடப்பொருட்படுத்தாது சிறிலங்காஇலங்கைத்தமிழர்களின்உயிருக்கும்நாளாந்த வாழ்வுக்கும் பாதுகாப்பு அளிக்க மறுக்கும் திட்டமிட்ட செயற்பாடாகவும் அமைகிறது. இதனால் இது ஈழத் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையின் மறுப்பாகவும் உள்ளது. இந்நிலையில் ஈழத்தில் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினை என்பது ஈழத்தமிழரின் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அனைத்துலக பிரச்சினையாக மாறுகிறது.

இனி, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகத்தின் வழிகாட்டலில் அனைத்துலக மனித உரிமை விசாரணைகளை அங்கு மேற்கொள்வதன் வழியாக மட்டுமே ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகிலும் மனித உரிமை வன்முறைகள் ஏற்படாது தடுக்க முடியும் என்பதே இலக்கின் ஒரே கருத்தாக உள்ளது.

இலங்கையில் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் மனித உரிமைகள் மறுக்கப்படுவது தெளிவாகியுள்ள நிலையில், உலகின் மனித உரிமைகள் அமைப்புக்கள் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழர்களுடன் இது தொடர்பானதங்கள்தொடர்புகளைஉருவாக்கப் புலம்பெயர் தமிழர்கள் விரைவாக செயற்பட வேண்டும். மேலும் புலம்பெயர் தமிழர்கள் இவ்அமைப்புக்களுடன்ஒற்றுமையானமுறையில்தெளிவானவிளக்கங்களையும் சான்றாதாரங்களையும் விரைந்து அளிப்பதும் அவசியமாகிறது. இந்த இரட்டை உறவு வழியாகவே இலங்கையில் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர்க்கான நீதி கிடைப்பதை நடைமுறைச் சாத்தியமாக்கலாம்.

**- ஆசிரியர்**




# சடலமாக விடுதலை பெற்று பேழையில் வீடு செல்லல்

## ஒரு அரசியல் கைதியின் மடல்

**விவேகரந்தனூர் சதீஸ்**

அன்னை, தந்தையுடன் ஆசைத் தங்கையின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கிறான். கஸ்டப்பட்டு உழைத்து குடும்பத்தின் பாமரத்தனத்தைப் போக்கி, சிறியதொரு வீட்டை அழகுறக் கட்டி அன்புத் தங்கையை அறிவுயரப் படிப்பித்து இஷ்டமாக வாழ வேண்டுமென்று கனவு கண்டான் மகேந்திரன்.

1993.09.27 அன்று அதிகாலை முறக்கொட்டாஞ்சேனைக் கிராமம் முப்படைகளின் சுற்றிவளைப்பிற்குள் சிக்கிக் கொள்கிறது. ஆவணச் சோதனையில் சந்தேகம் கண்ட ஏரா ளமான இளைஞர்களை அன்று இராணுவம் கைது செய்தது. அதில் சுசி என்ற மகேந்திரனும் ஒருவனாகிறான். தடுப்புக் காவல், புலன் விசாரணை, விளக்கமறியல், நீதிமன்றம் எனப் பகுதி பிரித்து காலம் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது.



சோற்றுக்கே சாத்திரம் பார்க்கும் நிலையிலிருந்த வறுமைக் குடும்பத்தால், கோட்டேறி வாதாடி சட்டத்தோடு பேராடி எதையும் சாதிக்க முடியாது போக, நீதியின் பலிபீடம் அவனுக்கு ஆயுள் தண்டனையுடன் கூடிய ஐம்பது வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. பெற்ற உள்ளங்கள் துடித்துப் போய் நாளடைவில் பிணி தொற்றிப் பரிதவித்தார்கள். வறுமையும் துயரமும் அவர்களை வறுத்தெடுக்க ஊரும் உறவும் தூரமாய்ப் போனது. வேதனையிலும் சோதனையிலும் தாய்க்குத் துணையாக இருந்த தந்தை, 2000ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டுப் பிரிய கை விலங்குடன் இறுதிச் சடங்கில் கலந்து கொள்கின்றான் மகேந்திரன். திலகமிழந்த தாய் தனிமையில் வாடினாள்.


போரச் சுவாலை பற்றியெரிந்து நீறு பூத்த நெருப்பாக தூர்ந்து போன நிலையில், ஜோசியம் பார்த்து தேசியம் பேசுபவர்களின் அரசியல் கரும பீடங்களை நாடி இடருதவி கோரினாள் தாய். அதன் போதெல்லாம்

ஏமாற்றம் மட்டுமே இலவசமாய்க் கிடைத்தது. என்ன செய்வதென்று விதியை நொந்து கொண்ட அரசியல் கைதியின் தாய், 2015ஆம் ஆண்டு ஆயுள் கைதியான தன் பிள்ளையை தனியாக தவிக்க விட்டுவிட்டு தெய்வலோகம் சென்றடைந்தாள். பெற்றவளுக்கு ஒருபிடி சோறு போட முடியாத பாவியாகி விட்டேனே என்கின்ற பெருந்துக்கத்தோடு விலங்கு பூட்டிய கைகளால் தாயின் சிதைக்குத் தீயை மூட்டிவிட்டு ஈர விழிகளுடன் சிறைச்சாலை நோக்கித் திரும்பினான் மகேந்திரன்.

> **விடுதலை இன்றி தினம் ஒரு நோயினால் அணுவணுவாகச் சாவதைப் பார்க்கிலும் ஒரேயடியாக செத்துவிடலாம் போலுள்ளது. இறைவா அதனையாவது தருவாயா?" என விரக்தியில் உரத்துப் புலம்பினான். அவனது உள்ளக் குமுறல் உயர்ந்த மதிற் சுவர்களில் பட்டுத் தெறித்து எதிரொலித்தது.**

"இனிமேல் எனக்கென்று யார் இருக்கிறார்கள்...? நான் யாருக்காக இருக்க வேண்டும்...? விடுதலை இன்றி தினம் ஒரு நோயினால் அணுவணுவாகச் சாவதைப் பார்க்கிலும் ஒரேயடியாக செத்துவிடலாம் போலுள்ளது. இறைவா அதனையாவது தருவாயா...?" என விரக்தியில் உரத்துப் புலம்பினான். அவனது உள்ளக் குமுறல் உயர்ந்த மதிற் சுவர்களில் பட்டுத் தெறித்து எதிரொலித்தது. தட்டுங்கள் திறக்கப்படும் என்றார்கள். தட்டிய போதெல்லாம் சிறைக் கதவுகளுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்ட இறைவன், கேட்ட சாவினை மட்டும் இத்தனை விரைவில் தந்து விடுவான் என்று எவர் கண்டார்.

ஆம், அதீத மன அழுத்தம், நீரிழிவு அதனால் சுகம் பெறாதிருந்த உடற்புண், கடந்தகால காச நோயின் தாக்கம் என மொத்த சரீரத்தையும் நோய் தீண்டியதால் மருந்து வில்லைகளை விருந்து போல உண்டு வாழ்ந்த மகேந்திரன், எழுந்து நடமாட முடியாது தள்ளாடினான். உடனிருந்த தோழமைகள் உபதேசம் செய்து வெலிக்கடை சிறை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தனர்.



இரண்டரை தசாப்தங்களுக்கும் மேல் ஒன்றாக உண்டுறவாடிப் பழகிய சகாக்களின் முகங்களை, மகேந்தினின் விழியிரண்டும் ஒரு தடவை உலாவ அவனை தூக்குப் படுக்கையில் கிடத்தி காவிச் செல்கின்றார்கள் காவலர்கள். ஓரிரண்டு நாட்களுக்குள் உடல்நிலை மோசமடைகிறது. ஆயுள்சிறை அனுபவிக்கும் ஒரு அரசியல் கைதி என்ற அடிப்படையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து, 01.01.2020 அன்று இரவு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவனது உயிர் பிரிந்து விட்டது.

காலம் என்பது மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஒரே செல்வம். கல்லறைக் கற்கள் பிறந்த நாளையும் இறந்த நாளையும் காட்டுகின்றன. இந்த இரண்டு நாட்களுக்கும் இடைப்பட்ட மகேந்தினின் வாழ்நாட்கள் இப்படி இரும்புச் சிதைக்குள்ளேயே மாண்டு போய்விடுமென்று யார் கண்டது. சிறையறைக்குள் அவனுறங்கும் சிறு இடத்தில் மனமுருகி விழி கசிந்து மலர்தூவி அஞ்சலிக்கின்றனர் சக தோழர்கள். அவர்கள் மனங்களில், "எமக்கும் ஒருநாள் இந்தக் கதிதானா..?" என்கின்ற கேள்வி எழுவதை முகங்கள் காட்டிக் கொடுக்கின்றன.

கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும்கூட, 14 ஆண்டுகள் அரசியல் கைதியாக இருந்து உயிரிழந்த ஒருவருக்கு இரங்கல் எழுதிய இந்தக் கட்டுரையாளன் இதற்கு 11 அரசியல் கைதிகளின் அகாலச் சாவுகளைக் கண்டுவிட்டான் என்பது பொதுச் சோகம். ஆட்சியாளர்களே! சடலமாக விடுதலை பெற்று பேழையில் வீடு செல்லும் அரசியல் கைதிகளின் பட்டியலுக்கு இத்தோடு முடிவு கிட்டுமா...? இல்லை, இன்னுமின்னும் நீண்டு செல்லுமா...?



# சுமையுடன் நீத்தார் நினைவாக சுமைதாங்கிகள்...!



வல்வை.ந. அனந்தராஜ்

**சு**மைகளைச் சுமந்து செல்வோர் களைப்புற்றவேளையில், அதனை இறக்கி வைப்பதற்காகத் தாரான மனம் படைத்த எமது முன்னோர்களால் பாதை ஓரங்களில், கட்டப்பட்ட அமைப்புக்களே சுமைதாங்கிகள். (Load bearer) ஆகும். இவை, சுமார் நாலரை அடி (1.2மீற்றர்;) உயரமும், ஒன்றரை தொடக்கம் 2அடிவரை அகலமும் கொண்டதான ஒரு சிறிய தடித்தசுவர் போன்ற சுண்ணாம்புக் கற்களினால் உருவாக்கப்பட்டு, இதன் மேற்பகுதி ஒரே மட்டமாக இல்லாமல், இரண்டு வெவ்வேறு உயரங்களிலான மட்டங்களில் அமைந்திருக்கும். சுமைகளைச் சுமப்பவர்கள் தலையில், அல்லது தோள்களில் சுமந்து செல்லும் பொழுது, அவற்றை இறக்கி வைப்பதற்குரிய மேடை, தலை உயரத்துக்கும், தோள் உயரத்துக்கும் வெவ்வேறாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவை எமது பண்டைய தமிழர்களின் பண்பைப்பறை சாற்றும் சின்னங்களில் ஒன்றாகத் திகழுகின்றன.

பிரதான போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் வாகன வசதிகள் இல்லாத காலத்தில், தமது உற்பத்திப் பொருட்களைத் தொலைவிலுள்ள சந்தைகளுக்கு எடுத்துச் செல்வோரும், சந்தைகளில் வாங்கிய பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வோரும், தொலைதூரப் பயணம், மற்றும் சமய ரீதியான யாத்திரைகள் செல்பவர்களும் தமக்கு வேண்டிய பொருட்களைத் தலைச்சுமையாகவே இடத்துக்கிடம் எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. இந்த நிலையில் சிறிது இளைப்பாறுவதற்காகப் பிறர் துணையின்றித் தனியாகவே சுமைகளை இறக்கி வைக்கவும் பின்னர் திரும்பவும் இலகுவில் தூக்கியேற்றவும் வசதியாக ஆள் உயரத்திற்கு சுமைதாங்கிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

அன்றைய காலங்களில் மருத்துவ வசதி விருத்தி அடையாத நிலையில் பிரசவத்தின் போது சில கர்ப்பிணித் தாய்மார், குழந்தை பெற்றுக் கொள்ளாமலேயே மரணிப்பது என்பது பொதுவாகவே ஒரு துன்பியல் நிகழ்வாக இருந்தது. இவ்வாறு அதீத எதிர்பார்ப்புக்களுடன் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கலாம் என்ற நிலையில் ஆசைகள் நிராசைகளாகி, மரணித்த தாய்மார்களின் ஆத்ம சாந்திக்காக அவர்களின் நினைவாகவே அந்தப் பெண்ணின், நெருங்கிய உறவினர்களினால் சுமைதாங்கிகள் அமைப்பது வழக்கமாக இருந்தது. இது "சுமைதாங்கி போடுதல்" எனப்பட்டது. கருப்பையில் சுமந்த கருவின் இழப்பினால் ஏற்பட்ட சுமையாலான துன்பம் நீங்கி நித்திய இளைப்பாறலை அந்தப் பெண் பெற்றுக் கொள்வாள் என்பது அன்றைய நம்பிக்கையாக இருந்தது.

இவ்வாறான சுமைதாங்கிகளில் சிலர் அந்தப் பெண்ணின் பெயர், இறந்த நாள் போன்ற சில விபரங்களையும் எழுதி வைத்திருப்பார்கள். பிறரது சுமையின் துன்பத்தைப் போக்குவதன் மூலம் அவளுக்கு வயிற்றுச் சுமையாலான துன்பம் நீங்கும் என்பது நம்பிக்கை. இதனால், முக்கியமான இடங்களில் சுமை தாங்கிகளை அமைப்பது அறச்செயலாகக் கருதப்பட்டது. சில சுமைதாங்கிகளுடன் குழந்தைகளைப் படுக்க வைக்கக்கூடிய சிறிய தொட்டில்களும் அமைக்கப்பட்டிருக்கின்றதைத் தமிழகத்தின் சில பிரதேசங்களில் காணலாம். தலைச்சுமையுடன் வருகின்ற பெண்கள் தமது குழந்தைகளையும் சேலைத் துணியில் அணைத்து வைத்து நெஞ்சில் கட்டித் தூக்கிக் கொண்டு வருவார்கள். தாங்கள் இளைப்பாறும் பொழுது குழந்தையைக் கீழே விடாது, இந்தத் தொட்டிலில் வளர்த்தி விடுவார்கள். இவ்வாறு குழந்தைகளைப் பார்க்கின்ற அந்த இறந்த பெண்ணின் ஆன்மா மகிழ்ச்சி அடைவதுடன், அதனது ஆசியும் அந்தக் குழந்தைக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் அந்த மக்களிடையே நிலவுகின்றது.

மேலும் போர்க்களங்களில் விழுப்புண்பட்டு இறந்த போர் வீரர்கள், அரச பரம்பரையினர், வளர்ப்புப் பசுக்களின் இறப்பு, பிதிர்களின் நினைவாகவும் சுமைதாங்கிகள் வைக்கும் நடைமுறையும், மன்னர் ஆட்சியில் இருந்தே ஆரம்பமானது. அன்று மதம், மொழி என்ற பேதங்களின்றி, பழமையான கலாசாரங் களை நினைவுகூரும் சின்னமாக இவை பயன்படுத்தப்பட்டு வந்தன.

மன்னர் ஆட்சிக் காலத்தில், சுமைதாங்கிகளை அமைப்பதாயின் அரசிடம் இருந்து அனுமதி பெறும் முறை இருந்தது. கி.பி.,1400இல், பாளையக்காரர்கள், ஜமீன்கள், அரசாங்க அதிகாரிகள் போன்றோர் சுமை தாங்கிகளை அமைப்பதற்கான, அனுமதியை வழங்கினர். ஆனால், கி.பி.19ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர், சுமைதாங்கிகள் அமைக்க அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை என்ற நிலை வந்ததும், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால், பல இடங்களில், சுமை தாங்கிகள் ஏற்படுத்தப்பட்டன.

ஒரு நடுகல்லின் முக்கியத்துவத்துக்கு ஈடாகவே அன்று அமைக்கப்பட் சுமைதாங்கிகளின் முக்கியத்துவமும், இருந்தது. நிழல் மரங்களுக்கு அருகில் நடப்பட்டு இருக்கின்ற சுமைதாங்கிகளுக்குப் பெரியவடிவமைப்புகள் எதுவும் அவசியமில்லை. தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள சுமைதாங்கிகள், யாழ்ப்பாணத்தில் காணப்படுவது போன்று அகலம் கூடியதாக அல்லாது, அவை இரண்டு கல்தூண்கள், மேலே குறுக்கே ஒரு கல்பாலம் ஒன்று அமைந்திருக்கும். ஒருவர் நின்றபடியே தலையில் உள்ள சுமைகளை இறக்கிவைத்து இளைப்பாறக்கூடியதாக, வாங்கில் போன்ற வடிவத்தில் மூன்று கருங்கற்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறான சுமைதாங்கிக் கற்கள் தமிழகத்தில் உள்ள சேலம் மாவட்டம், ஆத் தூர், தலைவாசல், கெங்கவல்லி, உடுமலை வாழப்பாடி போன்ற பகுதிகளில் இன்றும் வரலாறுகளைச் சுமந்தபடி, கம்பீரமாக நிற்பதைப் பார்க்கலாம். அவற்றைப் போன்று அகலம் கூடிய சுமைதாங்கிகள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் குறிப்பாக வல்வெட்டித்துறை ஊறிக்காடு, நெடியகாடு, சாவகச்சேரி, உடுவில், உடுப்பிட்டி போன்ற பல இடங்களில் காணப்படுகின்றன.

இங்கே காட்டப்பட்டுள்ள படம், வல்வெட்டித்துறையில் ஊறிக் காட்டில் காங்கேசன்துறை வீதியில் உள்ள சுமைதாங்கி. இதில் 1921 ஆம் ஆண்டில் மரணமடைந்த ஒரு பெண்ணின் விபரங்கள் பின்வருமாறு நினைவு கூரப்பட்டுள்ளது: '1921- கம்பர்மலை அய்யாமுத்து பெண் பாறுபதி – உபயம்' எனக் கல்லிலேயே பொறிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இலங்கைத் தொல் பொருள் திணைக்களத்தினால், 'பாதுகாக்கப்பட்ட தொல் பொருள் சின்னங்கள்' என்று பொறிக்கப்பட்ட செப்பேடும் இந்த சுமை தாங்கிக் கல்லில் காணப்படுகின்றது.

இத்தகைய மரபுகளும் பழக்கங்களும் காலப்போக்கில் மறைந்து, மாறாக தமது இறந்த உறவினர்களை நினைவு கூர்வதற்காக ஆலயங்களில் சில கட்டடங்களையோ அல்லது வளைவுகளையோ அல்லது பேருந்து தரிப்பிடங்களையோ கட்டி அவற்றில் அவர்களது பெயர்களைப் பதித்து விடுகின்றார்கள்.

சுமைதாங்கிகள், பிரதான பாதைகளுக்கு அல்லது ஒழுங்கைகளின் ஓரமாக அமைக்கப்படுகின்றபோதும், பொதுவாக இளைப்பாறுவதற்கான இடங்களில் வேறு வசதிகளுடன் சேர்த்தும் இவை அமைக்கப்பட்டிருந்தமையைச் சில இடங்களில் காணலாம்.

ஆனால், கிராமப்புறங்களில் சில இடங்களில் சுமைதாங்கிகள் பெரும்பாலான பகுதிகளில் அழிவடைந்தும், பாசி படர்ந்த நிலையிலும், எமது முன்னோர்களின் வாழ்க்கை முறையின் பண்பாட்டு எச்சங்களாகவே இன்றும் காணப்படுகின்றன. இன்றைய காலகட்டத்தில், போக்குவரத்து வசதிகள் உருவாக்கப்பட்டதுடன், காட்டுப் பகுதிகளாகவும், மக்கள் நடமாட்டம் குறைந்த கிராமப் புறங்களாகவும் இருந்த பிரதேசங்கள் இன்று நகர மயமாக்கல்களினால் நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்ட நிலையில் இத்தகைய சுமைதாங்கிகள் போன்றன தேவையற்றவை ஆகிவிட்டன. எனினும், எமது முன்னோர்கள் என்ன நோக்கத்திற்காக இத்தகைய சுமைதாங்கிகளை அன்று அமைத்தனர் என்ற தகவல்களையாவது, எமது இன்றைய சந்ததியினர் அறிந்து கொள்ள வைக்க வேண்டியது அவசியமாகும்.

சுமைதாங்கிகள் தொடர்பாக இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளரும், தஞ்சாவூர் தொல்லியல் கழக உறுப்பினருமான உ. விஜயராமு, கள ஆய்வு செய்த பொழுது, ரோமின் மத்திய தரைகடல் பகுதியில் அகழ்வாராய்ச்சியாளரால் கண்டு பிடிக்கப்பட்ட உலகின் மிகப் பழமையான சுமைதாங்கிக்கல் சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் கண்டுபிடிப்பு மத்திய தரைக்கடல் பகுதியில் மனிதர்கள் வாழத்தொடங்கிய காலகட்டத்தை அடையாளம் காண உதவும் என்று ஆராய்ச்சியாளர்களால் நம்பப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே போன்று இத்தாலியின் டெல் அவிவ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் மற்றும் இத்தாலி கடலாராய்ச்சி மையத்தின் ஆய்வாளரும் இணைந்து நிகழ்த்திய ஒரு அகழ்வாராய்ச்சியில், 12 மீற்றர் உயரம் கொண்ட சுமை தாங்கிக் கல்லின் பாகங்கள் சிசிலி கடலுக்கடியில் 40 மீற்றர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஆரம்பத்தில் தரையில் அமைக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும் எனவும், மனிதன் வாழ்ந்துவந்த இப்பகுதி பின்னர் கடல்கோள்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடல்நீரால் சூழப்பட்டிருக்கலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

பிரித்தானியாவிலும் மிகப் பெரிய பழங்கால நினைவுச் சின்னமான, சுமைதாங்கிக் கற்களின் கூட்டத்தை, அகழ்வாராய்ச்சியினர் கண்டுபிடித்துள்ளனர். பிரித்தானியாவின் வடக்கு அம்புஸ் பெரி பகுதியில் டுரிங்டன் சுவர்கள் என்ற இடத்திற்கு அருகில், 3 கிலோமீற்றர் தூரத்தில் மிகப் பெரிய சுமைத்தாங்கிக் கற்களின் கூட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அகழ்வாராச்சியின் மூலம் கண்டறியப்பட்ட பொருட்கள்,

தொடர்ச்சி 14ம் பக்கம்

# கூர்மையடையும் இனவாத ஒடுக்குமுறை
# தமிழ்த் தரப்பினர் எதிர்கொள்வது எப்படி?

கொழும்பிலிருந்து **அகிலன்**

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச பதவி ஏற்றிருக்கும் நிலைமையில் இனவாத ஒடுக்குமுறை மேலும் கூர்மை அடையக்கூடிய அறிகுறிகள் தெரிகின்றன. இரண்டு பிரதான சிங்களத் தேசியக் கட்சிகளும் வரப்போகும் பொதுத் தேர்தலை இனவாதத்துடன்தான் அணுகுகின்றன. நன்கு நிறுவன மயப்படுத்தப்பட்ட சில இனவாதம் வடக்கு கிழக்கு தமிழ் பகுதிகளில் முழு அளவிலான ஆக்கிரமிப்பை செய்வதற்கு தயாராகி வருகின்றது. இந்த நிலைமைகளை எதிர்கொள்வதற்கு தமிழ் தலைவர்களைத் தயாராக்குவது யார்? ஒன்றிணைந்து இதனை எதிர்கொள்வதற்கான உபாயம் ஒன்று அவர்களிடம் உள்ளதா?



கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளதன் பின்னணி அனைவருக்கும் தெரியும். இராணுவ அதிகாரியான அவர் போர் வெற்றியையும் இனவாதத்தையும் அடிப்படையாக வைத்துத்தான் தேர்தலில் போட்டியிட்டார். அவர் இந்த தேர்தலில் களம் வழங்குவதற்கு சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னதாகவே 'வியத்மக' மற்றும் 'எலிய' போன்ற அமைப்புகள் அவரை ஜனாதிபதி வேட்பாளராகத் தயாரிப்பதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தன.

இந்த இரண்டு அமைப்புகளும் முன்னாள் இராணுவ அதிகாரிகளையும் சிங்கள புத்திஜீவிகளையும் அதிக அளவுக்கு கொண்டுள்ளன. சிங்கள பௌத்த ராஜ்ஜியம் ஒன்றை நிறுவுவதை இலக்காகக் கொண்டு தமது திட்டத்தை அவர்கள் வகுத்துக் கொண்டார்கள். புத்திஜீவிகளை அதிகளவு கொண்டுள்ள இந்த அமைப்புகள் இதற்கான கொள்கை திட்டமிடல்களை வகுத்து கொடுத்த அதே வேளை யில், கள நிலைமைகளை கையாள்வதற்காக ஞானசார தேரர் தலைமையில் பொதுபலசேனா போன்ற அமைப்புக்களையும் உருவாக்கி அவர்களையும் களத்தில் இறங்கினார்கள்.

இலங்கைத்தீவு முழுவதையும் சிங்கள-பௌத்த மயமாக்குவது என்ற மறைமுகமான மூலோபாயத்தின் அடிப்படையில்தான் இவர்களுடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. அதற்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாகவே கடந்த நவம்பர் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை அவர்கள் கருதுகின்றார்கள். அதனால்தான் அதிகார பரவலாக்கம் போன்ற எதனையும் தன்னிடம் எதிர்பார்க்க முடியாது என்ற கருத்தை கோத்தாபய ராஜபக்ச வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார். ஸ்ரீலங்காவின் அதிகாரத்திற்கு வந்த எந்த ஜனாதிபதியும் இவ்வாறான கருத்துக் களை உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் வெளிப்படுத்தவில்லை. ஆனால் கோத்தா இந்தியாவில் வைத்து இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

பௌத்த சிங்களமயமாக்கல் என்பதை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு தந்திரோபாயங்களை கோத்தாபயவுக்கு பின்னணியில் இருந்து செய்யப்படும் புத்திஜீவி அமைப்புகள் வைத்திருக்கின்றன. அதன் முதற்கட்டமாகத்தான் அரசியல் தீர்வு இல்லை என்பதை அவர் கூறுகிறார்.

இதனைவிட வடக்கு கிழக்கு பகுதிகளில் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் இப்போது புதிய வடிவத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் ஒன்றுதான் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என கருதப்படும் இடங்களில் பௌத்த விகாரைகளை அமைப்பதும், அவற்றின் பாதுகாப்புக்காக எனக் கூறி இராணுவத்தை வைத்திருப்பதும். இதன் மூலம் தமிழ் மக்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள பல பகுதிகளை சிங்கள மயமாக்குவதும் அதனை தமது பாரம்பரிய பகுதிகளாக காட்டிக் கொள்வதும் ஆகும்.

இதனை அவர்கள் பல இடங்களில் செயற்படுத்தி இருக்கின்றார்கள் வடக்கு கிழக்கில் சுமார் 200 வரையிலான இடங்கள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அவற்றில் ஒன்றுதான் முல்லைத் தீவிலுள்ள நீராவியடி. சமீபத்தில் அங்கு ஏற்பட்டுள்ள பிரச்சனை வாசர்களுக்கு தெரிந்திருக்கும். இதுபோல வடக்கிலும் கிழக்கிலும் இருக்கக்கூடிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை தங்களுடைய பகுதிகளாக மாற்றிக் கொள்வதும் அதன் மூலமாக தமிழ் பகுதிகளுக்கு இருக்கக்கூடிய பிரதேச தொடர்புகளை துண்டிப்பதும் அரசாங்கத்தின் தந்திரோபாயமாக இருக்கின்றது.



தொல்பொருள் திணைக்களம், காட்டு இலாகா போன்ற அரசாங்க நிறுவனங்கள் இந்த இலக்குடனேயே செயற்படுகின்றன.
இதனைவிட, தமிழ்ப் பகுதிகளில் இடம்பெறும் பொது நிகழ்வுகளில் இராணுவ அதிகாரிகள் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்படுவது இப்போதும் தொடர்கின்றது. மருத்துவமனைகள் விடுதிகள் போன்றவற்றை திறந்து வைப்பதற்கு இராணுவ அதிகாரிகள் அழைக்கப்படுகின்றனர். பொங்கல் விழாக்களில் பிரதம அதிகாரியாக இராணுவத்தினர் கலந்து கொண்டார்கள். பொது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நிகழ்வுகளிலும் படையினரின் பிரசன்னத்தை காணக்கூடியதாக இருக்கின்றது. இது இராணுவத்தை தொடர்ந்தும் வடக்கு-கிழக்கில் அதாவது தமிழர் தாயகப் பகுதிகளில் வைத்துக் கொள்வதற்கான ஒரு உபாயம்தான்.

இவ்வாறு தாயகப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு தொடரும் அதேவேளையில், தமிழ் மக்களின் பொருளாதாரம் போன்றவற்றை பாதிக்கக்கூடிய செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றது. முன்னாள் போராளிகள் இப்போதும் பொருளாதார ரீதியில் பலவீனமானவர்களாகவே இருக்கின்றார்கள்பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் வலுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதுவும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை. இது போர் முடிவடைந்து பத்து வருடங்களின் பின்னர் பலவீனமான ஒரு நிலைமையிலேயேதமிழ்சமூகம் இருக்கிறது என்பதை காட்டுகின்றது. இது ஏதோ ஒரு வகையில் இராணுவத்தின் உதவிகளில் தங்கியிருக்க வேண் டிய தேவையை ஏற்படுத்துகின்றது.

யாழ்ப்பாணத்திலும் சில நகர பகுதிகளிலும் காணப்படும் ஆடம்பரங்கள் வெறுமனே காட்சிப் பொருட்களாக மட்டுமே இருக்கின்றனவே தவிர மக்கள் மத்தியில் அதற்கான பொருளாதார முன்னேற்றங்கள் இல்லை. அரசியல் ரீதியான நம்பிக்கையும் அவர்களிடம் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் மத்தியில் விரக்தி நிலை தொடர்வதற்கு தமிழத் தலைமைகளின் சுயநலப் போக்கும் ஒரு காரணம். அவர்களும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் செயற்படவில்லை.

இந்தப் பின்னணியில் மற்றொரு பொதுத் தேர்தலை நாடு எதிர் கொள்கின்றது. தேர்தல் அரசியலில் மக்கள் நம்பிக்கை வைக்காதவர்களாக இருந்தாலும் கூட, தேர்தலின் மூலம் தெரிவாகக் கூடியவர்கள் தான் அடுத்த 5 வருடங்களுக்கு நாட்டையும் மக்களையும் நிர்வகிக்க போகிறார்கள். அதனால், அதில் கவனம் செலுத்த வேண்டியது தவிர்க்க முடியாததது. ஜனாதிபதி தேர்தலின் போது 13 அம்ச கோரிக்கை ஒன்றை முன்வைத்து தமிழ் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் முயற்சியை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டிருந்தனர். ஆனால் தமிழ் கட்சிகளிடையே காணப்படும் அதிகாரப் போட்டியால், அந்த முயற்சி தோல்வியடைந்தது. இப்பொழுது பொதுத்தேர்தல் எதிர்கொள்ளப்படும் வேளையில் தமிழ் கட்சிகள் இடையே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கொண்டு வருவது மிகவும் அவசியம் என்பது உணரப்பட்டுள்ளது.

பிரதான கட்சியாக இருக்கக்கூடிய தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. தேர்தலில் இடத்தை பிடிப்பதற்காக அங்கு இடம்பெறும் இழுபறிகளை நாங்கள் நேரடியாக பார்க்க கூடியதாக இருக்கின்றது. கொள்கை கோட்பாடுகள் மக்கள் நலன்கள் என்பதற்கு அப்பால் பதவியைப் பிடிப்பதற்காக கூட்ட மைப்புக்குள் நடக்கும் இந்தப் போட்டிகள் மக்களுக்கு விரக்தியைத்தான் ஏற்படுத்துகின்றது.

**தொடர்ச்சி 14ம் பக்கம்**

# தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவுக்கு விட்டுக்கொடுப்புகள் அவசியம்



**வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா**

**தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் தங்கள் கட்சி நிலைப்பாடு குறித்தும், புலம் பெயர்ந்த மக்களின் தேர்தல் பங்களிப்பு குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா இலக்கு இதழுக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி.**

**கேள்வி –**

*எதிர்வரும் பொதுத் தேர்தலில் தங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?*

**பதில்-**

வழமையாக தேர்தலை எதிர்கொள்வது போல் இம்முறையும் எதிர்கொள்வதற்கு எமது கட்சி தயாராக உள்ளது. கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து வேட்பாளர்கள் நியமிக்கப்பட்டு தேர்தலுக்கான முன்னெடுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**கேள்வி-**

*தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து தேர்தலைச் சந்திக்கும் நிலை இக்காலகட்டத்தில் இருக்கின்றதா?*

**பதில்-**

தமிழ்க் கட்சிகளை இணைப்பதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து ஓர் முன்னெடுப்பை மேற்கொண்டிருந்தனர். மக்களின் விடிவிற்காக, இனப்பிரச்சினைத் தீர்விற்காக இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது. ஆனால் ஏனைய கட்சிகளும் அவர்களுக்கேற்ற வகையிலே அவர்களின் கொள்கைகள், விட்டுக் கொடுப்புகள், மற்றவர்களை அனுசரித்துப் போகின்ற நிலைமைகள் ஏற்படும் போது ஒற்றுமையாக சேர்ந்து கொள்ளலாம். ஒற்றுமையாக தேர்தலை எதிர் கொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருக் கின்றோம்.



**கேள்வி-**

*காணாமல் போனவர்கள் அனைவரும் இறந்து விட்டதாக சிறிலங்கா அரசாங்கம் கூறியிருக்கின்றது. இந்தக் கருத்துத் தொடர்பாக உங்களின் நிலைப்பாடு எப்படியிருக்கின்றது?*

**பதில்-**

அரசாங்கம் தனது போக்கிற்கு எதுவும் சொல்லிவிட முடியாது. அவர் ஒரு ஜனாதிபதி. அவரது ஆட்சிக் காலத்திலேயே யுத்தத்தை கொண்டு நடத்தியவர். சர்வதேச மட்டத்திலே ஜெனீவா தீர்மானங்கள் இருக்கின்றது. சில பொறிமுறைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இது அவரின் குடும்பப் பிரச்சினையோ, தனிப்பட்ட பிரச்சினையோ அல்ல. ஒரு நாட்டின் தலைவர் என்ற வகையில் அவர் இதனை எதிர்கொள்ள வேண்டும். அவரின் போக்கிற்கு அவர் இவ்வாறு கூறிவிட்டு மௌனம் சாதிக்க முடியாது. சர்வதேச ரீதியாக ஒரு தீர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கேள்வி –**

*புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள இந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொள்வதற்கு எவ்வாறான நிலை காணப்படுகின்றது. சாதகமான நிலையா? அல்லது பாதகமான நிலையா?*

**பதில்-**

புதிய அரசாஙகத்தோடு பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதும் தயாராகத் தான் இருக்கின்றது. அதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தான் புதிய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குத் தான் தமிழ் மக்கள் அந்த ஆணையை வழங்கியிருக்கிறார்கள். புதிய அரசாங்கம் தமிழ் மக்களின் வாக்குத் தேவையில்லை. சிங்கள மக்களின் வாக்குகளால் தான் வென்று விட்டேன் என்று கூறிக்கொண்டு தன்போக்கிலே நாட்டை ஆட்சி செய்ய முடியாது. இது சிங்களவர்களுக்கு மட்டும் உரிய நாடு அல்ல. அதில் தமிழர்களுக்கும் ஒரு பங்கு இருக்கின்றது. மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எங்கள் பிரதிநிதிகளோடு அரசாங்கம் இணக்கத்திற்கு வர வேண்டும். அவர்களுடன் பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த நேரத்திலும் தயாராக இருக்கின்றது.

**கேள்வி –**

*எதிர்வரும் பொதுத் தேர்தலில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என நினைக்கின்றீர்கள்?*

**பதில்-**

புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு ஒரு காத்திரமான பங்களிப்பைச் செய்வது நல்லது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. தமிழ்க் கட்சிகளைப் பிரித்து விடுவதில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் ஒரு பங்கு இருக்கின்றது. எனவே மக்களின் நன்மை கருதி புலம்பெயர்ந்த மக்கள் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்தால், அது மக்களுக்கு நன்மையாக அமையும்.

**கேள்வி –**

*வன்னித் தேர்தல் தொகுதியைப் பொறுத்த வரையில் வெளிநாடுகளில் உள்ளவர்களின் வாக்குகள் அதிகமாக இருக்கின்றது. புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகம் வந்து வாக்களிக்க வேண்டும் என்ற நிலை ப்பாட்டில் உங்கள் கட்சி எவ்வாறு இருக்கின்றது?*

**பதில்-**

அவர்கள் வந்து வாக்களிப்பது எமக்கு நல்லது தானே. எங்களுக்கு வாக்கு அதிகரிக்கும். தமிழர்களின் வாக்குப் பலம் அதிகரிக்கும்.

**கேள்வி –**

*புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி அழுத்தமாக ஏதும் சொல்ல விரும்பு கின்றீர்களா?*

**பதில்-**

புலம்பெயர் தமிழர்களுக்கு ஒரு பங்கு இருக்கின்றது. அவர்கள் தோற்றுப் போன தமிழினத்தின் மறுவாழ்விற்காக பல பங்களிப்பை செய்து வருகின்றார்கள். அதை நான் நன்கு அறிவேன். இழப்பை சந்தித்த மக்களுக்காக வாழ்வாதாரங்கள், கல்வித் திட்டங்கள் போன்றவற்றை ஏற்படுத்துவதில் மிகவும் அக்கறையாக செயற்படுகின்றார்கள். அதேபோல் அவர்கள் தமிழினத்தின் விடிவிற்காக ஒருமித்த மனதோடு பங்களிப்பு செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்து.



**கேள்வி –**

*யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வடகிழக்குப் பகுதியிலுள்ள மக்களுக்கு முழுமையான வசதிகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றதா? அல்லது அவர்களுக்கான தேவைகள் இருக்கின்றதா? புலம்பெயர்ந்த தமிழர்கள் அவர்களுக்கு எவ்வாறான உதவிகள் செய்ய வேண்டும்?*

**பதில்-**

முழுமையான வசதிகள் கிடைத்திருப்பதாக கூறமுடியாது. நானும் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவள். இந்த யுத்த வலியை சுமந்து கொண்டிருக்கின்றவள் என்ற வகையில் யுத்தத்திலே நேரடியாக பதிக்கப்பட்ட மக்களுக்காக பலவிதமான வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றேன். என்னைப் பொறுத்த வரையில் புலம்பெயர் தமிழர்கள் வழங்கும் நிதியை ஒரு பொறிமுறையூடாக வடகிழக்கு மக்களுக்கு வழங்குவார்களாக இருந்தால், அது சரியான மக்களுக்கு போய்ச் சேர்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

ஊடகங்கள், இணையத்தளங்களுடன் தொடர்பு கொள்ள வசதியுள்ளவர்கள் பல இடங்களில் நிதியினைப் பெற்றுக்கொள்வதும், அந்த வசதி இல்லாதவர்கள் அதாவது எழுத வாசிக்கத் தெரியாத, யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் எந்தவித உதவியையும் பெறாத நிலையும் காணப்படுகின்றது. இந்த நிலை மாறவேண்டும் என்று கூறினால் இரு பக்கங்களிலும் ஒரு பொறிமுறை உருவாக வேண்டும். நிதியை வழங்குபவர்களும், பெறுபவர்களும் ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் செயற்படுவார்களாயின் அபிவிருத்தி என்பது அதாவது மக்களுக்கு தேவையானவற்றை இலகுவாக அடையாளம் கண்டு செயற்படக்கூடியதாக இருக்கும்.

# ஒரு தசாப்தத்தை கடந்து....

ராஜி பற்றர்சன்




முத்துக்குமார். 1982ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று தூத்துக்குடியில் பிறந்த இவன் தன் இனத்தை உயிராய் நேசித்த தன்மான தமிழன். தமிழகத்தில் யாரும் இந்த தியாகியை மறந்திருக்க முடியாது. தமிழீழத்தில் நடந்த கொடூர யுத்தத்தில் குழந்தைகளும் பெண்களும் உட்பட பல்லாயிரக் கணக்கான அப்பாவிகள் ஈவி ரக்கமின்றி அநியாயமாக கொல்லப்பட்டதை எதிர்த்து எந்த அரசியல்வாதியும் குரல் கொடுக்க முன்வராத நிலையில் இந்த இளம் எழுத்தாளர் 2009 ஜனவரி மாதம் 29ஆம் திகதி தன்மீது பெட்ரோலை ஊற்றி தன்னையே ஆகுதியாக்கி எல்லோர் கவனத்தையும் ஈர்த்தான். தான் எதற்காக தீக்குளிக்க முடிவு செய்தான் என்பதை கடிதம் ஒன்றில் பதிவு செய்து விட்டு தன் உடலை வைத்து போராடி இளைஞர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தி, தனது உடலை ஆட்சியாளர்களோ காவல்துறையோ கைப்பற்றி அடக்கம் செய்ய விடாமல் தனது உடலை ஒரு துரும்புச் சீட்டாக வைத்துக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் கொண்டு திரிந்து மாணவர்கள் இளையோர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தி ஈழத்தில் போர் நிறுத்தம் ஏற்படும் வரை போராடுமாறு கூறி, அப்போராட்டத்தை தொடருங்கள் என்று வேண்டுகோள் விடுத்திருந்தான் அந்த மாவீரன்.

ராஜீவ் காந்தியின் கொலையை காரணமாக காட்டி இந்தியாவே பழிவாங்கும் நோக்கில் ஈழத்தில் அப்பாவி மக்களை கொன்று குவிக்கிறது என்று தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியிருந்தான் இந்த உணர்வாளன். அன்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சட்டக் கல்லூரி மாணவர்களோடு அனைத்து மாணவர்களும் இணைந்து கொண்டு ஈழத்தமிழர்களுக்கு நீதி கேட்டு, அகிம்சை வழியில் போராட வேண்டும் என்ற வேண்டுகோளுடன் தீயில் கருகினான். தமிழ் நாட்டில் வாழும் பிற இனத்தவரின் ஆதரவையும் சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் இறைஞ்சி, பதினான்கு கோரிக்கைகளை முன்வைத்து தீயில் வெந்து தீய்ந்தான். அம்மாவீரனின் வேண்டுகோளை நிறைவேற்ற எடுத்த முயற்சிகள் தோல்வியுற்ற அதேவேளை, கொந்தளித்த மாணவர்களை ஒடுக்கும் முயற்சியை அன்றைய தமிழக அரசு வெற்றிகரமாக செய்ததை மறந்து விட்டிருக்க முடியாது. கொஞ்சம் கூட மனச்சாட்சியின்றி எல்லாமே மறைக்கப்பட்டது , மறுக்கப்பட்டது.

நான் இவ்வாறான தற்கொலை மரணங்களை ஆதரிப்பதில்லை என்றாலும், அடிக்கடி இம்மாவீரன் மனதில் வந்து போவது என்னவோ உண்மைதான். பலவேளைகளில் இம்மாவீரனின் தியாகம் வீணாகி விட்டதோ என்று எண்ணத் தோன்றினாலும், வீழ்ந்த விதை விருட்சமாகும் என்பது பொய்த்து போகாது என்ற நம்பிக்கை விடியலை நோக்கி காத்து நிற்க வைக்கிறது.

ஒரு இனத்தின் விடுதலை என்பது தனிநாடு என்பதை கடந்து அடிமைத்தனங்கள், மூட நம்பிக்கைகளில் இருந்து பெறும் விடுதலையையும் குறிக்கிறது. இந்த நூற்றாண்டிலும் மேலோங்கி இருக்கும் சாதி, மத வெறி தீண்டாமையில் இருந்து எப்படி விடுதலையடைய போகிறோம் என்பதை சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கும் நாம், தெளிந்த புத்தியுள்ள, கல்விகற்ற ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டிய கடமை எம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதையும் மறந்து விடலாகாது.

எங்கே எம்மை தொலைத்துள்ளோமோ அங்கேயே எம்மை முதலில் தேட வேண்டும். எம் ஒவ்வொருவருக்குள்ளும் மாற்றத்தை தேடுவோம். எப்போதுமே மற்றவரை பார்த்து குற்றம் கண்டு பிடிப்பதை நிறுத்தி விட்டு, முன்னுதாரணமாக நாமே செயற்படுவோம். எம் செயல்களால் மற்றவர் கவரப்படும் போது நிச்சயம் அங்கு ஒரு மாற்றம் வரும். பலர் நம்மோடு கைகொடுப்பார்கள்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். இளைஞர்களுக்குள் ஏற்படுத்தப்படும் எழுச்சி அக்கினி சுவாலையாய் பரவி பற்றியெறியும் தன்மை வாய்ந்தது. ஆகவே போதை பொருளுக்கும், சினிமாவிற்கும் அடிமைப்பட்ட சமூக த்தை தகர்த்து, நல்லறிவும் தெளிந்த புத்தியும் உள்ள தலைவர்கள் உருவாக வேண்டும்.

இந்த தமிழ் நாட்டு மண்ணிலே விதையாய் விழுந்த தியாகி முத்துக்குமார் மடியவில்லை. ஒருநாள் நிச்சயமாக, தன்னையே தீப்பிழம்பாக்கி எல்லோர் மனமும் உருக உயிரை அச்சமின்றி மாய்த்த அந்த இடத்தில் இருந்து அந்த விதை முளைத்து கொடியாய் பற்றி படரும் காலம் வரும். அம்மாவீரனின் கனவு நனவாகும்.

# பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் இந்திய குடியரசுதின கொண்டாட்டங்கள்



இந்தியாவின் 71ஆவது குடியரசு தினம் இன்று(26) கொண்டாடப்பட்டது. என்றும் இல்லாதவாறு இம்முறை இந்தியா முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்தியத் தலைநகர் டில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தேசிய கொடியேற்றினார். தலைநகர் மட்டுமல்லாது தமிழகத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. டில்லியில் நடைபெற்ற குடியரசுதின விழாவில் பிரேசில் நாட்டு அதிபர் ஜேர் போல்சனாரோ சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார். நிகழ்வில் பிரதமர் மோடி, முப்படைத் தலைவர்கள், முப்படை தளபதி, பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்டனர். அணிவகுப்பு மரியாதை, கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. தமிழக பாரம்பரிய கலைநிகழ்வை வெளிப்படுத்தி கிராமியக் கலைஞர்கள் பங்கு கொண்டனர்.

இதேவேளை குடியரசுதின விழா நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் ஷகீன் பாக்கில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டமும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

தமிழகம் சென்னையில் நடைபெற்ற குடியரசுதின விழாவில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தேசியக் கொடியை ஏற்றி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்விற்காக சென்னையில் 15 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நிகழ்வில் தமிழக அரசியல்வாதிகள் பலரும் கலந்து கொண்டனர். சிறப்பு நிகழ்வாக விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மாநிலங்களில் கொண்டாடப்பட்ட குடியரசுதின விழாவில் அந்தந்த மாநில ஆளுநர்கள் தேசியக் கொடியை ஏற்றினர்.


சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட பெருநகரங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காஷ்மீரின் லடாக் பிரதேசத்தில் 17,000 அடி உயரத்தில் இந்திய – திபெத் எல்லையில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

அரச, தனியார் அலுவலகங்கள், கோயில்கள் உட்பட அனைத்து இடங்களிலும் தேசியக் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன.

# மக்களின் வாழ்வாதாரங்களை பாதிக்கும் ஹைட்ரோ காபன் திட்டம்

கல்யாணி




இந்திய மத்திய அரசானது மாநில அரசு, மற்றும் மாநில மக்களின் அனுமதிகளைப் பெறாது தனது வர்த்தக நோக்கத்திற்கான நட வடிக்கைகளை முன்னெடுப்பது வழக்கம். மக்களின் ஆலோசனைகளோ மாநில அரசுக ளின் ஆலோசனைகளோ இங்கு மதிக்கப்படு வதில்லை. இதனால் மக்கள் மத்திய அரசிற்கு எதிராக பல விடயங்களில் போராட் டங்களை நடத்தி வருகின்றனர் என்பது உலகறிந்த விடயமாகும். அதே வகையில், தற்போது ஹைட்ரோ காபன் திட்டம் தொடர்பாக மீண் டும் தனது வேலைகளை மத்திய அரசு ஆரம்பித்துள்ளதைக் கண்டித்து மக்கள் போரா ட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இந்தியா பயன்படுத்தும் பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருளில் 80 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் படுகிறது. அதேபோல 45 சதவீத எரிவாயுவையும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறா ர்கள். இதற்காக பெருமளவு பணத்தை செலவு செய்ய வேண்டியது உள்ளது. மேலும் குறுகிய காலத்திற்கு மட்டுமே எரிபொருள் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்தியா விலேயே எரிபொருள் உற்பத்தி செய்ய வேண் டிய தேவை இந்தியாவிற்கு உருவா கியுள்ளது.

மக்களின் எதிர்ப்பையும் மீறி இந்த ஹைட்ரோ காபன் திட்டத்தை அரசு முன்னெடு ப்பதால், ஹைட்ரோ காபனின் உற்பத்தி, அதன் பயன்பாடு மற்றும் பாதிப்புகள் பற்றி தெரிந்து கொள்வோம்.

### ஹைட்ரோ காபன் அல்லது மீதேன் என்றால் என்ன? அவை கிடைக்கும் இடங்கள்

ஹைட்ரோ காபன் அல்லது மீதேன் என் பது ஐதரசன் வாயு மற்றும் காபன் வாயுக்களின் சேர்க்கையாகும். இந்த ஹைட்ரோ காபன் வாயு, ஒட்சிசன் உதவியுடன் எரிபொருளாக மாற்றி பயன்படுத்தப்படுகிறது. பெட்ரோல், டீசல், நிலக்கரி, எரிவாயு, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு, போன்ற அனைத்துமே ஹைரோ காப னின் வடிவங்களே. நாட்டின் எரிபொருள் தேவையைத் தீர்ப்பதும் ஹைரோ காபனே.

பெரும்பாலான ஐதரோ காபன்கள் இயற் கையாக பூமியில் இருந்தே கிடைக்கின்றன. பெட்ரோலியம், நிலக்கரி, இயற்கை வளி ஆகியன சிதைவுற்று வெளிப்படுத்தும் அதிக அளவிலான காபன் மற்றும் ஐதரசன் அணுக்கள் பிணைந்து மேற்படி சேர்வைகளைத் தருகின்றன.

புதுச்சேரி முதல் மன்னார் வளைகுடா வரை உள்ள நிலப் பகுதியில் 25 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவும், கடலில் சுமார் 30 ஆயிரம் கிலோ மீற்றர் பரப்பளவும் கொண்ட காவிரிப் படுகை பகுதியே இந்தியாவில் பூமிக்கு அடியில் அதிகப்படியான எண்ணெய் வளமும், இயற்கை எரிவாயுவும் உள்ள பகுதிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இங்கேயேஹைரோ காபன் கிணறுகள் தோண்டப்படவுள்ளதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

காவிரி டெல்டா பகுதிகளில் தொடர்ந்து எண்ணெயும், இயற்கை எரிவாயுவும் எடுக்கப் பட்டு வருகிறது. இந்த நிலையில் காவிரி டெல்டா உள்ளடக்கிய காவிரிப்படுகை முழு வதிலும் ஹைட்ரோ காபன் எடுக்க மத்திய அரசு முடிவு செய்ததுடன் இதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளது. அத்துடன் மத்திய அரசு, யாரும் எதிர்பாராத வகையில் தமிழ் நாட்டிலும், புதுச்சேரியில் 274 இடங்களிலும் ஹைட்ரோ காபன் கிணறுகள் அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது




### ஹைட்ரோ காபன் அகழ்வில் ஸ்ரெர்லைட் கம்பனியின் பங்கு

சுரங்கத் தொழில் மற்றும் உலோகங்கள் தொடர்பான ஆய்வுகளில் உலகளவில் ஈடுபடும் வேதாந்தா ஆய்வு நிறுவனத்தின் ஓர் அமைப்பாக ஸ்டெர்லைட் நிறுவனம் இயங்குகின்றது. வேதாந்தா நிறுவனம் கடந்த 2017ஆம் ஆண்டே மத்திய பெட்ரோலியம் அமைச்சகத்துடன் இணைந்து ஹைட்ரோ காபன் கிணறுகளைத் தோண்ட அனுமதி பெற்று விட்டது. இதற்காக தமிழகம் தூத்துக்குடியில் தங்கள் ஸ்டெர்லைட் நிறுவனத்தை நிறுவியது. இதன் முதல் கட்டப் பணியாக ஹைட்ரோ காபன் கிணறுகளை அமைக்க எவ்வளவு செலவாகும்? எவ்வளவு நாட்களாகும்? பூமிக்குள் செலுத்தப்படும் வேதிப்பொருட்களை பாதுகாப்பது எவ்வாறு? கழிவுப் பொருட்களை அகற்றுவது எவ்வாறு? என்பது பற்றி ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய அரசு வேதாந்தா நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டது. தமிழகம், புதுக்கோட்டையில் ஹைட்ரோ காபன் அகழ்வுத் திட்டத்திற்கு இந்த நிறுவனமே பொறுப்பாக இயங்குவதற்கு தயாராக உள்ளது.

### இந்த திட்டத்தால் ஏற்படும் தீமைகள்

ஹைட்ரோ காபன் எடுப்பதற்காக 1000 மீற்றரில் இருந்து 3000 மீற்றர் வரை ஆழ்துளைக் கிணறு தோண்டப்படும். இவ்வாறு தோண்டும் போது, அங்கு தேங்கியிருக்கும் ஹைரோகாபன் வாயுக்கள் வெளியேறத் தொடங்கும். அந்த இடைவெளியில் நிலத்தடி நீர் சென்று நிரப்பிக் கொள்ளும். இதனால் நிலப்பகுதிகள் எல்லாம் விவசாயம் செய்ய முடியாத நிலைக்குக் கொண்டு வரப்படும். அத்துடன் ஹைரோ காபன் கிணறுகளிலிருந்து பலவிதமான நச்சு வாயுக்கள் வெளியேறும். அத்துடன் வெளியாகும் கழிவு கள் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும். இதனால் உயிரினங்கள், மற்றும் தாவரங்கள் அழிந்து இயற்கையும் நாசமாகி விடும். இந்த நிலையில் காரைக்கால், புதுச்சேரி பாகூர் பகுதியில் தண்ணீரை அதிக அளவில் உறிஞ்சும் சமயத்தில் கடல்நீர் அதிக அளவில் உள்புகுந்து, நல்ல நீர் உப்புநீராக மாறும் அபாயம் ஏற்படும்

தற்போது நிலத்தடி நீர் பூமிக்கு கீழே 100 மீற்றரில் இருந்து 400 மீற்றர் ஆழம் வரையிலுமே உள்ளது. ஹைட்ரோ காபன் எடுப்பதற்காக 1000 மீற்றர் வரையில் துளையிடும் போது, நிலத்தடி நீர் அந்த இடத்தை நிரப்புவதற்கு கீழே சென்று விடும். அத்துடன் ஹைட்ரோ காபன் எடுக்கும் கிணறுகளிலிருந்து அதிகளவான நீர் வெளியேற்றப்படும். இதனால் விவசாயம், குடிநீர் போன்ற தேவைகளுக்கு நிலத்தடி நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டு அந்தப் பகுதி விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லாமல் வறண்ட பூமியாக மாறிவிடும்.

காவிரிப் படுகையின் பூமி சல்லடையாக துளைக்கப்படும் பட்சத்தில் நில நடுக்கம் ஏற் படும் அபாயம் அதிகரிக்கும். இந்த திட்டத்தால் வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்று மத்திய அரசு சொல்கிறது. ஆனால் ஹைட்ரோ காபன் கிணறுகளில் பணி புரிய இலட்சக்கணக்கான வட மாநிலத்தவர்கள் தமிழ் நாட்டில் குடியேற வாய்ப்புள்ளது. இது தமிழர்களின் கலாச்சாரத்தை உடைக்கும் வகையில் மாறும்.

இதனாலேயே இந்தத் திட்டத்தை மக்கள் எதிர்க்கின்றனர். இதற்காகவே போராட்டங் களை மேற்கொள்கின்றனர்.

### மக்களின் போராட்டம்

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் என்னுமிடத்தில் 2006ஆம் ஆண்டு பூமிக்கடியில் துளையிடப்பட்டது. இதனால் 21 லட்சம் ஏக்கர் நிலம் உபரி நிலமாக மாறி விடும் என்பது கண்டு பிடிக்கப்பட்டதால் பொதுமக்கள் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்தினர். இந்தப்



போராட்டத்தை அடக்கிய படையினரின் துப் பாக்கிச் சூட்டில் 13பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதனையடுத்து விருப்பம் இன்றி அந்த இடத்தில் அப்பணி கள் நடைபெறாது என்று தமிழக அரசு உயர திகாரிகளும், மத்திய அமைச்சர் பொன்.ராதா கிருஷ்ணனும் உறுதி அளித்தனர். இதனையடுத்து இந்தத் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது. 174 நாட்களாக மக்கள் நடத்தி வந்த போராட்டம் தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டது. ஆனால்


தொடர்ச்சி 14ம் பக்கம்



# பிரபாகரன் சட்டகம்:
## விடுதலைப்புலிகளின் உத்திகள்

**பகுதி 1**

புலிகளின் உத்திகளைப் பற்றி ஒருவருடன் இணையத்தில் உரையாடும் பொழுது அவர் "புலிகள் தான் தோற்று விட்டார்களே, அப்படி என்றால் அவர்களின் உத்திகள் சரியில்லை என்றுதானே பொருள்" என்று கூறினார். இது போன்ற கருத் துக்கள் உத்திகளைப் பற்றிய எளிமையான பார்வையினால் உருவாவது. நாம் உலகிலேயே சிறந்த உத்திகளைப் பயன்படுத்தினாலும், அது நமது வாய்ப்புகளைத் தான் கூட்டுமே ஒழிய உறுதியாக வெற்றியடைவோம் என்ற உறுதியைத் தர முடியாது. அதுபோன்ற நிலைதான் புலிகளுக்கு ஏற்பட்டது. புலிகளைப் பற்றி பலர் உணராதது என்னவெனில், புலிகள் பலவகை உத்திகளில் உலகிலேயே முன்னோடிகளாக இருந்தவர்கள். இந்நூலிற்கான கரு என்பதே புலிகளின் உத்தி களை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து எழுதிய கட்டுரைகளின் வழியேதான் எனக்குக் கிடைத்தது. இந்த உத்திகளுக்குச் சரியான பெயர் வைக்க வேண்டுமானால் அது ***"பிரபாகரன் சட்டகம்"*** என்பதே பொருத்தமானதாக இருக்கும். அவர்களின் உத்திகள் என்பது அடிப்படையில் நாம் இதுவரை இந்நூலில் பார்த்த உத்திகளே.




*இனி புலிகள் எவ்வாறு செயற்பட்டார்கள் என்று பார்ப்போம்.*

*1. புலிகளின் அடிப்படைக் குறிக்கோள்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு உலகிற்கே தெரிந்த ஒன்று.*

***"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"***
***"கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்"***
*– பிரபாகரன் அவர்கள்*

*புலிகள் இயக்கம் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை நடத்திய அனைத்து செயற்பாடுகளும் மேலுள்ள குறிக்கோள்களை நோக்கியதே. இந்தியா வந்து மிரட்டிய போதும் குறிக்கோள்களை விட்டுக் கொடுக்கவில்லை; பின்பு உலகமே வந்து மிரட்டிய போதும் அடிபணியவில்லை. ஏனென்றால் இந்த அடிப்படைக் குறிக்கோள் களைக் கைவிட்டால் தேசியம் என்பதே இருக்கப் போவதில்லை என்பதை அவர்கள் அறிந்ததுதான். எதில் வேண்டுமானாலும் ஒரு தேசியம் சமரசம் செய்யலாம், ஆனால் அடிப்படைக் குறிக்கோள் களில் சமரசம் செய்ய முடியாது.*

**சேது ராமலிங்கம்**

*"தமிழினம் வெறுமனே நிலத்துக்காக மட்டும் இதுவரை போராடவில்லை. கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற போராட்டமானது மண்மீட்புக்கானது மட்டுமல்ல. கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள் என்று எமது தமிழீழ தேசியத் தலைவர் கூறியதைப் போல தமிழ் மக்களின் அடையாளங்களைப் பாதுகாப்பதற்கான போராட்டமே கடந்த 30 வருடங்களாக இடம்பெற்றது... யுத்தத்துடன் மட்டும் நின்றுவிடாமல் சமகாலத்திலேயே எமது அடையாளங்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் தேசியத் தலைவர் முனைப்புடன் செயற்பட்டார். அதற்காக பல அமைப்புகளை உருவாக்கி அவற்றைத் திறம்படச் செயற்படுத்தியிருந்தார்."*

*2. புலிகள் இயக்கம் என்பது முழுத்திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இயக்கம் கிடையாது. அது ஈழ சூழலுக்கேற்ப படிப்படியாக பரிணமித்த, தனித்துவமான இயக்கம். யாரையும் நகல் எடுத்து உருவாக்கப்பட்ட இயக்கமல்ல. ஒரு மனிதன் ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்து ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து படிப்படியாக பல்வேறு படையணிகளையும் கட்டமைப்புகளையும் வளர் த்த இயக்கம்.*

*3. புலிகள் எப்பொழுது ஈழத்தை அடைவோம், எப்படி ஈழத்தை அடைவோம் என்று கூறவில்லை. அதுபோன்ற பாதையை யாராலும் இச்சிக்கலான உலகில் வகுக்க முடியாது என்பதை ஏற்கனவே பார்த்தோம். அவர்கள் பல்வேறு படையணிகளை, அமைப்புகளைக் கட்டி எழுப்பி வெற்றிக்கான வாய்ப்புகளைக் கூட்டுவதன் அடிப்படையிலே செயற்பட்டார்கள்.*

*4. புலிகள் தங்களை ஒரு குழுக்களின் குழுவாக கட்டமைத்துக் கொண்டார்கள். அவர்கள் அனைவரும் ஒரே குறிக்கோளுடன், ஒரே உணர்வுடன், இறுக்கமான நட்புடனும் நம்பிக்கையுடனும் குழுக்களின் குழுவாகச் செயல்பட்டனர். அவர் களைப் போல சிறந்த குழுக்களை உலகில் வேறு எவராலும் உருவாக்கமுடியுமா என்பது ஐயமே.*

*5. புலிகளை ஒரு ஒற்றைத் தலைமையினால் கட்டப்பட்ட சர்வாதிகார இயக்கம் என்று பலர் தவறாக புரிந்து கொள்கின்றனர். குழுக்களின் குழு அவ்வாறு இயங்க முடியாது. அதற்கான தலைமைப் பண்புகளே வேறு. இவற்றை குழுக்களின் குழு பகுதியில் பார்த்தோம்.*

*ஒரு குழுக்களின் குழுவில் தலைமையின் முதற் கடமை என்பது அமைப்பு செழிப்பதற்கான பண்பாட்டு சூழலை உருவாக்குவதுதான், சதுரங்க ஆட்டத்தைப் போன்று காய்களை நகர்த்துவது அதற்குப் பின்பு தான் வரும். பிரபாகரன் அவர் களின் செயற்பாடுகளை கூர்ந்து கவனித்தால் இத்தன்மை விளங்கும். அவர்தான் இயக்கத்திற்கு*

***தொடர்ச்சி 12ம் பக்கம்***

புலிகள் போராட்டத்தை ஒரு கோட்பாட்டுடன் நந்திக்கடலில் நிறுத்தினார்கள் என்பதைப் புரிந்து எதிரிகள் அதை மடைமாற்ற படாதபாடுபடுகிறார்கள்.

விளைவாக எமக்குள்ளிருந்தே 2009 இலிருந்து உற்பத்தியான இணக்க, அவல, அடிபணிவு, ஒப்படைவு, சரணாகதி அரசியல் முகவர்களைக் கொண்டு நந்திக்கடல் அரசியலை தொடர் கேள்விக்குட்படுத்திக் கெண்டேயிருக்கிறார்கள்.

இதையெல்லாம் பொருட்படுத்தும் நிலையில் நாம் இல்லை..ஏனென்றால் நந்திக்கடலே இன அழிப்பின் பின் இப்படியான உதிரிகள் எல்லாம் உற்பத்தி செய்யப்படுவார்கள் என்பதை ஒரு கோட்பாடாகவே முன்னறிவித்திருக்கிறது.

புலிகளிடம் ஒரு பண்பு இருக்கிறது. நாம் தெளிவாக அறத்துடனும், அதே நியாயப்பாட்டுடனும் தெளிவாக உள்ளபோது மாற்றுக் கருத்து, எதிர்க்குரலுக்குக் காது கொடுக்கலாம், ஆனால் அவற்றை எமது அறத்துடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது என்பதுதான் அது.

அதனால் இவை எது குறித்தும் கவனப்படுத்தாமல் ஒருமித்த சிந்தனை கொண்டவர்கள் கொண்டு நந்திக்கடலை கோட்பாட்டுருவாக்கம் செய்தோம் - இன்னும் செய்து கொண்டிருக்கிறோம்.

ஆழக்கடலை சிறு குச்சி கொண்டு அளக்கும் முயற்சி இது - ஆனாலும் பணி தொடர்கிறது.

இந்தப் பணியில் எம்மோடு அமெரிக்காவிலிருந்து இறுதியாக இணைந்து கொண்டவர்தான் முனைவர் சு.சேதுராமலிங்கம்.

அவர் எழுதிய " தமிழ்த் தேசியத்துக்கான பெருந்திட்டம்" நூல் அறிவாயம் வெளியீடாக சென்னை கண்காட்சியில் வெளியிடப்பட்டுள்ளது.

நந்திக்கடல் கோட்பாடுகளை கிரமமாக உள்வாங்கிய ஒரு தமிழ்த் தேசிய சிந்தனையாளனின் செறிவான பார்வை இந்த நூல்.

அவரை அறிமுகம் செய்வதில் "நந்திக்கடல் கோட்பாட்டுருவாக்க சிந்தனைப் பள்ளி" பெருமிதம் கொள்கிறது.

**பரணி கிருஸ்ணரஜனி.**

# ஈழத்தமிழர்களுக்கு ஐ.நா. வின் அனைத்துலக கல்வித்தின எதிர்பார்ப்புகள்

## எதுவுமே என்றுமே இல்லாத அவலநிலை

*1989ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை குழந்தைகளின் உரிமைகள் குறித்த மரபு சாசனத்தைப் பிரகடனப்படுத்தியது. இருந்த போதிலும் 2020இல் உலகில் 265 மில்லியன் சிறுவர்களும் இளம்பருவத்தினரும் பள்ளிக் கல்வியில் சேரவோ பள்ளிப் படிப்பை முடிக்கவோ சந்தர்ப்பம் இல்லாமலும், 617 மில்லியன் சிறுவர் களும் இளம்பருவத்தினரும் ஆரம்ப வாசிப்போ ஆரம்பக் கணிப்புகளோ செய்யத் தெரியாதிருக்கும் சூழலிலும், 4மில்லியன் அகதிக் குழந்தைகள் படிப்பதற்குப் பள்ளி இல்லாது இருக்கின்ற நிலையில், ஐக்கிய நாடுகள் சபை இரண்டாவது முறையாக அனைத்துலக கல்வித்தினத்தை 24.01.2020 இல் உலகெங்கும் முன்னெடுத்தது.*

*இந்நேரத்தில் இலங்கையிலும் சரியான புள்ளி விபரங்கள் கூட இல்லாத நிலையில் ஈழத் தமிழ் மாணவர்களும் தங்களின் அடிப்படை மனித உரிமையாம் கல்வி உரிமை பலவிதங்களில் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்வதை ஐ.நாவுக்கும் உலக மக்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை புலம்பெயர் தமிழர்களுடையதாக உள்ளது என்பதை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.*

**பற்றிமாகரன்**

“கல்வியினை மதித்து, அதன் மனித நலத்திற்கான மையத் தன்மையை உணர்ந்து, நீடிப்புத் திறனுள்ள வளர்ச்சியை” 2030ஐ இலக் காண்டாக வைத்து உலக மக்கள் பெற வேண்டும்” என்ற கருத்து ஐ.நாவால் முதன்மை ப்படுத்தப்பட்டது. ‘மக்களுக்காகவும், வாழும் கோளுக்காகவும், வளர்ச்சிக்காகவும், அமைதிக் காகவும் கற்றல்’ என்ற மையக்கருவின் மூலம் கல்வியின் ஒன்றுபடுத்தும் இயல்பை வெளிச்சப்படுத்தி, அதன் மனிதம் நோக்கிய இலக்குகளை எடுத்துரைத்து, கல்வி எல்லோரதும் கூட்டான அபிவிருத்திக்கான ஆவல்களை நிறைவேற்ற உதவ வேண்டும் எனவும் இவ்வாண்டில் ஐ.நா. அழைத்துள்ளது. ஈழத்தமிழர்கள் இந்த அழைப்பை இன்றைய காலத்தின் தேவையாகவே உணர்கின்றனர்.

கல்வியும் கற்றலும் மனிதத்தின் மிகப் பெரிய மூலவளம் என்பதை மீண்டும் புதுப்பித்து, கல்வி அடிப்படை மனித உரிமையாகவும், பொது நன்மையாகவும், 2030ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நீடிப்புத் திறனுள்ள நிலையான வளர்ச்சி என்பதற்கு கல்வியின் பங்களிப்பு முக்கியமானது எனவும் இந்த அனைத்துலகக் கல்வித் தினம் வலியுறுத்தி உள்ளது.

‘எல்லோரையும் உள்ளடக்கிய நியாயமான தரமுள்ள கல்வி, வாழ்நாள் முழுவதும் பெறத்தக்க கல்வியாக” 2030இல் நீடிப்புத் திறனுள்ள வளர்ச்சி என்ற எதிர்பார்ப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ள 17இலக்குகளையும் அடையக் கூடிய முறையில் இன்றைய கல்வி அமைய வேண்டுமென்பது ஐக்கிய நாடுகள் சபையின் விருப்பாக உள்ளது. ஐ.நா வின் இந்த இலக்குகள் நோக்கிய பயணத்தில் புலம்பெயர் தமிழர்கள் தங்கள் பங்களிப்பை அளிப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் ஈழத்தில் அவர்களது உடன் பிறப்புகள் இதனை அனுபவிப்பதற்கு ஐ.நா தான் உதவ வேண்டும்.

“கல்வி ஒருவரின் சமுதாய வாழ்வினதும் தனிமனித வாழ்வினதும் வளர்ச்சிக்கான இதய மாக உள்ளது. கல்வி எல்லா மக்களுக்கும் அவரவர் திறன்களை வளர்க்கவும் அதன் வழி அவர்கள் தங்களின் படைப்பாக்க ஆற்றல்களை உணரவும், இதன் வழியாக அவர்கள் தங்களின் வாழ்வின் பொறுப்புக்களை நிறைவேற்றவும், தாங்கள் சமுதாயத்திற்கு அளிக்க வேண்டிய பங்களிப்புக்களுக்கான கொள்ளவுகளைப் பெருக்கவும் உதவ வேண்டும். வறுமைக்கும் சமத்துவமின்மைக்கும் எதிராகப் போராடவும், உடல் நலங்களையும் பொருள் வளங்களையும் முன்னேற்றவும், ஒதுக்கல்களை வெற்றி கொள்ளவும், கல்வி பலம் வாய்ந்த ஊக்கியாகத்திகழ வேண்டும். கல்வி சனநாயகத்தையும், சட்டத்தின் ஆட்சியையும், உறுதிப் படுத்தவும், பாதிப்புக்கள் அடைந்துள்ள மக்களுக்கான சக்தியூட்டல்களை வழங்கி சமத்துவத்தன்மையை அதிகரிக்கவும் செய்ய வேண்டும். இறுதியாக பன்முகப்பட்ட பரிமாணங்களில் உள்ள சமுகத் திற்கான சவால்களான வறுமை, பாலினச் சமத்துவமின்மை, மற்றும் சமுகநிலைத் தனிமைப்படுத்தப்படல் என்பவற்றுக்கு எதிராக எழச் செய்ய வேண்டும்” என “மக்களுக்கான கல்வி என்பது குறித்து ஐ.நா விளக்கியுள்ளது. தமிழ்ப் பெற்றோர்கள் சிலர் பதவிக்கும் பணத்திற்கும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் கல்வி எனக் கருதும் அறியாமையை ஐ.நாவின் மக்களுக்கான கல்வி என்ற இவ்விளக்கம் நிச்சயம் மாற்றியமைக்கும் எனலாம்.

தனிப்பட்டதும், பொதுவானதுமான மனித நடவடிக்கைகள் நாம் வாழும் கோளின் இயற்கையின் மேல் அளப்பரிய தகைப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அறிவறிஞர்கள் உடனடியாக தற்போதைய வளர்ச்சி முறைகளில் உரிய மாற்றங்களை ஏற்படுத்தத் தவறினால் சுற்றுச் சூழல் சீரழிவுகளும், சீரான உயிரியல் மாறுபாட்டு இழப்புகளும், காலநிலை மாற்றங்களும் மனித வாழ்வினையே முற்றாக அழித்துவிடும் என எச்சரித்து வருகின்றனர். இவற்றை உணரவும் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவும் கல்வி உதவ வேண்டும் என்பதை “வாழும் கோளுக்கான கல்வி” என்பதனால் ஐ.நா. வலியுறுத்துகிறது. ஐ.நாவின் இந்த விளக்கத்தை ஒவ்வொருவரும் மனதிருத்திச் செயற்பட வேண்டிய காலமிது.

நீடிப்புத் திறனுள்ள வளர்ச்சிக்கு, தொழிற் திறன்களை வளர்க்கும் கல்வி மூலம் யாருமே பின்தள்ளப்படாத அனைவரையும் உள்வாங்கக் கூடிய கல்வி அவசியம் என்பதை வளர்ச்சிக்கான கல்வி என்பதன் மூலம் ஐ.நா. எடுத்து விளக் கியுள்ளது. ஐ.நா சிறிலங்கா அரசாங்கம் தமிழர்களின் கல்வித் திறனைத் தள்ளி வைத்துச் செயற்படும் போக்கை மாற்றியமைக்க வேண்டும் என்பது இதனைப் படிக்கும் ஒவ்வொரு ஈழத்தமிழன் மனதிலும் தோன்றும் கருத்தாக உள்ளது.

“தொடர்ச்சியான வன்முறைகளும், ஆயுதப் போராட்டங்களும் எல்லா மனித உரிமைகளையும் கல்வி கற்பதற்கான உரிமை உட்பட வன்முறைப்படுத்தி விடுகிறது. வன்முறைகளைத் தடுத்து நீடிப்புத் திறன் கொண்ட அமைதியை உருவாக்குவதற்கு சனநாயகமும், பிரதிநிதித்துவ நிறுவனங்களும், நன்கு திறமையுடன் செயற்படும் நீதி முறைமையும் தேவையாக உள்ளது. கல்வி அரசியல் பங்கேற்புகளுக்கும், உள்வாங்குதல்களுக்கும், துணை வலிமை கொடுப்பதற்கும் சனநாயகத் திற்கும் முன்நிபந்தனையாக உள்ளது. நியாயத்தை நிலை நிறுத்தி அமைதியைத் தாங்குகின்ற தூணாகவும் ஊக்கியாகவும் கல்வி உள்ளது.

100 நாடுகளில்; 50 ஆண்டு காலத்தை எடுத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கல்வியில் இடைவெளி ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் போராட்டங்கள் உருவாகியுள்ளமை கண்டறியப்பட்டது. கல்வி அமைதியைக் கட்டி எழுப்புவதிலும் மறுசீரமைப்புக்கும் முக்கியமான பங்கிளை வகிக்கின்றது. விளிம்பு நிலையில் வாழும் மக்களுக்கு கல்வி நீதியை அடையவும், அமைதியான சமுதாயமாக அவர்கள் வாழவும் உதவுகிறது. இவற்றை அமைதிக்கான கல்வி என்பதன் வழி ஐ.நா எடுத்து விளக்கியுள்ளது.

இக்கட்டத்தில் ஈழத் தமிழர்களின் கல்வியில் சிறிலங்கா நீதியற்ற முறையில் ஏற்படுத்தியமை குறித்த வரலாற்று எண்ணங்களும் எழுகின்றன. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை சிறிலங்கா அவர்களின் அடிப்படை மனித உரிமையான கல்வியைத் தொடர்ச்சியாக வன்முறைப்படுத்தியே அவர்களை இரண்டா ந்தரக் குடிகளாக ஒடுக்கியது. 1956ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் ஈழத்தமிழர்களின் தாய் மொழி உரிமையைப் பயன்படுத்தி அவர்கள் இலங்கை அரசாங்கத்திலும் அதன் நிர்வாக கட்டமைப்புக்களிலும் வேலை பெறும் உரிமை மறுக்கப் பட்டு, சிங்களவர்கள் நாட்டின் அனைத்துக் கட்டமைப்புக்களிலும் பெரும்பான்மையாக வேலை பெறுவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டது.

இதனால் இரண்டாம்நிலை உயர்தரக் கல்வியை முடித்த தமிழ் மாணவர்கள் பெருமளவில் வேலையின்மைக்குள் சிக்கினர். அதேவேளை கடல் மற்றும் நிலப் பயன்பாடுகளிலும், சுதந்திரமாக நாடெங்கும் தனிநிலையிலும் பொது நிலையிலும் வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவதிலும், கனிம வளங்களை மற்றும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வடக்கு கிழக்கில் தொழிற்சாலைகள் அமைப்பதிலும், சிங்கள பௌத்த பேரினவாத அரசுக்கள் தொடர்ச்சியாக மறுப்புக்களையும் கடும் போக்குகளையும், அரச ஆதரவுடன் கூடிய பயங்கரவாதச் செயல்களையும் செய்து வந்தமையால் பள்ளிக் கல்வி முடித்த ஈழத்தமிழ் மாணவர்கள் இயல்பாகவே வேலையற்ற வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் சமுதாயமாக மாறினர்.

**தொடர்ச்சி 14ம் பக்கம்**

# இஸ்ரேலிய பாணியில் அழிக்கப்படும் தமிழின விடுதலைப்போர் ஆவணங்கள்

**ஆர்த்திகன்**

ரஷ்ய அதிபர் விளடிமிர் புட்டின், பிரான்ஸ் நாட்டு அதிபர் இமானுவேல் மக்ரோன் உட்பட உலகின் 40 நாடுகளின் தலைவர்கள் ஜெருசலேமில் உள்ள கொலோகோஸ்ட் நினைவாலையத்தில் கடந்த 23ஆம் நாள் கூடியிருந்தனர்.

இரண்டாம் உலகப்போரின் போது யூத இனத்திற்கு எதிராக ஜேர்மனியின் நாசிப் படையினர் மேற்கொண்ட இனஅழிப்பின் போது அவர்கள் பயன்படுத்திய செறிவாக்கப்பட்ட முகாம்களில் இருந்து மக்கள் விடுவிக்கப்பட்டதன் 75ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டே அவர்கள் அங்கு கூடியிருந்தனர்.

இந்த முகாம்களில் தடு த்து வைக்கப்பட்டிருந்த ஒரு மில்லியனிற்கு மேற்பட்ட யூத இன மக்கள் காணாமல் போயிருந்தனர் அல்லது கொல்லப்பட்டிருந்தனர். அவர்களை நினைவுகூரும் முகமாக 1953ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த நினைவாலயத்தில் மில்லியனுக்கு மேற்பட்ட ஆவணங்கள் சேமிக்கப்பட்டுள்ளன. அங்கு 170,000 நூல்களும் உள்ளன.

இந்த நினைவிடத்திற்கு ஆண்டு தோறும் உலககெங்கும் இருந்து ஒரு மில்லியன் மக்கள் வந்து செல்வதுண்டு. இன்றுவரை சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 6மில்லியன் மக்களில் 4.8மில்லியன் யூத மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார் ஆய்வு மையத்தின் வரலாற்றுத்துறை ஆய்வாளர் கலாநிதி றொபேட் றொசெற்.

ஆனால் இன அழிப்பில் இருந்து தப்பிய யூத இனம் இன்று பலஸ்தீனம் மீது ஒரு இன அழிப்பை முன்னெடுத்து வருவதுடன், இன அழிப்பில் ஈடுபடும் ஏனைய நாடுகளுக்கும் முன் ஊதாரணமாகத் திகழ்ந்து வருகின்றது.

சிறீலங்கா அரசு மேற்கொண்ட இன அழிப்புக்கு ஆயுத மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது இஸ்ரேல். தற்போது தமிழ் மக்கள் மீதான முகநூலின் தொழில்நுட்ப வன்முறையும் பலஸ்த்தீனத்திற்கு எதிராக இஸ்ரேல் முன்னர் மேற்கொண்ட உத்தியை பின்பற்றியே இடம்பெற்று வருகின்றது. தமிழ் மக்களின் விடுதலைப் போர் தொடர்பான ஆவணங்கள், விடுதலைப்புலிகளின் போரியல் ஆவணங்கள், சிறீலங்கா அரசு மேற்கொண்ட இனப்படுகொலை தொடர்பான ஆவணங்கள் என பலதரப்பு மக்களாலும் முகநூலில் பதிவிடப்பட்ட பெருமளவான ஆவணங்களை முகநூல் நிறுவனம் அழித்து வருவதாக அதிர்ச்சியான தகவல்கள் வெளியாகிவருகின்றன.

விடுதலைப்புலிகளின் தலைவரின் படங்களை பதிவிட்டனர் என்ற காரணங்களை முன் வைத்து பொருமளவான தமிழ் மக்களின் முக நூல் கணக்கை முடக்கிய முகநூல் நிறுவனம், அவர்களின் ஆவணங்களையும் அழித்துள்ளது.



தன்னால் பதிவிடப்பட்ட பெருமளவான வரலாற்று ஆவணங்களை தான் இழந்துள்ளதாக தமிழ் அரசியல் ஆய்வாளர் ஒருவர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

அதாவது 2016ஆம் ஆண்டு இஸ்ரேலின் ஆலோசனையின் பேரில் முகநூல் மற்றும் ருவிட்டர் ஆகிய நிறுவனங்கள் பலஸ்தீனம் தொடர்பில் அந்த மக்களால் பதிவிடப்பட்ட பல ஆயிரம் ஆவணங்களை அழித்திருந்தது.

வன்முறைகளை தூண்டுகிறார்கள் என்ற போர்வையில் மேற்கொண்ட இந்த இலத்திரனியல் இனஅழிப்பில் பலஸ்தீன விடுதலைப் போர் தொடர்பில் பதிவிடப்பட்ட பெருமளவான ஆவணங்கள், தகவல்கள், இஸ்ரேலின் இனப்படுகொலை தொடர்பான ஆவணங்கள் என்பன அழிப்பட்டதாகவும் இது இஸ்ரேலின் நீதி அமைச்சர் அயிலெற் சகேட் இன் நேரடி உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டதாக கேட்ஸ் ஊடகம் தகவல் வெளியிட்டிருந்தது.

அதன் பின்னர் இஸ்ரேலிய ஊடகம் ஜெடிளோத் ஆரானோத் இற்கு கருத்து தெரிவித்த இஸ்ரேலிய நீதி அமைச்சர், தமது திட்டத்தில் 70 விகிதத்தில் தாம் வெற்றி பெற்றுள்ளதாக தெரிவித்திருந்தார்.

ஆனால் தற்போது இதே வழிமுறையை இந்திய – சிறீலங்கா அரசுகள் முகநூல் நிறுவனத்தின் உதவியுடன் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வருகின்றன.

ஒருபுறம் தமிழ் மக்களின் விடுதலைப் போர் தொடர்பான ஆவணங்களை அழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ள இந்தியா, தற்போது சிறீலங்காவில் உள்ள தமிழ் மக்களின் இருப்பையும் கேள்விக்குறியாக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளதாக தமிழர் ஆய்வுகூடம் தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

சிறீலங்காவில் உள்ள பௌத்த பேரினவாத அமைப்பான பொதுபல சேனா அமைப்புடன் இந்தியாவின் ஆர்.எஸ்.எஸ் என்ற அமைப்பு இணைந்து அதன் பயிற்சி மையங்களை 17 மாவட்டங்களில் அமைத்துள்ளதாகவும்இது தமிழர்களுக்கு எதிராக இயங்கவுள்ளதாகவும் ஆய்வுகூடம் மேலும் தெரிவித்துள்ளது.

தமிழ் இனத்திற்கு எதிராக சிறீலங்கா அரசு இந்திய மத்திய அரசுடன் இணைந்து மேற்கொள்ளும் இனஅழிப்பில் பல இடங்களில் இஸ்ரேலின் உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. தாயகத்தில் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கைகளும் இஸ்ரேலிய பாணியில் மேற்கொள்ளப்படுவதாக அண்மையில் தாயகத்தை தளமாகக் கொண்ட அரசியல்வாதி ஒருவர் தெரிவித்திருந்தார்.

இத்தகைய இன அழிப்புக்களில் இருந்து தமிழினம் தன்னை எவ்வாறு காத்துக் கொள்ளப்போகின்றது தொடர்பில் நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டும். எமது ஆவணங்களை காப்பதற்கு ஆவணக் காப்பகங் களை அமைப்பதுடன், தமிழ்த் தேசிய ஊடகங்களைப் பலப்படுத்தி அதன் மூலம் எமது இனத்தின் இருப்பை தக்கவைப்பதற்கான தயார்ப்படுத்தல்களை நாம் மேற்கொள்வதுடன், வர்த்தக மற்றும் பிராந்திய நலன்சார் சமூகவலைத் தளங்களில் இருந்து எமது இன அடையாளங்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளையும் மக்களிடம் எடுத்துச் செல்லவேண்டும்.

## பிரபாகரன் சட்டகம்: ... தொடர்ச்சி..

அடிப்படையான புலிப் பண்பாட்டை உருவாக்கினார், நெருக்கமான குழுக்களை கட்டி அமைத்தார், பல படையணிகளை உருவாக்கி

இணைத்தார், வலைப்பின்னலை உலக அளவில் பெரிதாக்கினார், தொடர்ந்து இயக்கத்தின் ஒழுக் கத்தையும் பண்பாட்டையும் காத்தார். அவரின் பேச்சும் செயலும் எப்பொழுதும் ஒத்திருக்கும், முரண்கள் இருக்காது. ஈழத்திலிருந்து பின்வா ங்கினால் தன்னை சுட்டு விடுங்கள் என்று கூறி யது, தனது குடும்பத்தை இறுதிவரை களத் திலேயே வைத்திருந்தது, எளிமையாக வாழ்ந் தது, முன்னின்று போர் புரிந்தது என்று மற்ற வீரர்களுக்கு முன்னதாரணமாக திகழ்ந்தார். அவர் உருவாக்கிய சூழலில் நூற்றக்கணக்கான திறமையான தளபதிகளும், ஆயிரக்கண க்கான ஓர்மை கொண்ட புலிவீரர்களும் உருவாகினர். புலிப்படை என்பது பிரபாகரன் என்ற தோட்டக்காரர் உருவாக்கிய விளைச்சல், ஓர் அதியுச்ச திறமை கொண்ட குழுக்களின் குழு. இதுதான் இருப்பதிலேயே பிரபாகரன் அவர்களின் முக்கியமான தலைமைச் செயல்பாடு. போர் உத்திகள் வகுப்பது என்பதெல்லாம் இரண்டாம் பட்சம் தான். அதை அவரின் படைத் தளபதிகளே பெரும்பாலும் பார்த்துக்கொள்வா ர்கள்.

பிரபாகரன் அவர்கள் அதிகாரத்தை தளபதிகளிடம் பகிர்ந்தளித்து குழுக்களின் குழுவாக செயல்பட்டவர். அவரின் முக்கிய வேலை என்பது தோட்டக்காரர் போன்றது, கட்டளை இடுவது அல்ல. புலிகளின் ஆற்றல் என்பது குழுக்களின் குழுவில் உள்ளடங்கிய சனநாயகப் பண்புகளிலிருந்தே வருகிறது .

**அடுத்த இதழில் நிறைவடையும்.**

# மீண்டும் முடியை மாற்றுவாரா புட்டின்?

வேல் தர்மா



ரஷ்ய அதிபர் விளடிமிர் புட்டின் நாட்டு மக்களுக்கு 2020 ஜனவரி 15ஆம் திகதி உரையாற்றிய போது, ரஷ்யாவின் அரசியலமைப்பு மாற்றப்படும் என்றார். கடந்த இருபது ஆண்டுகளாக ரஷ்யாவின் தலைமை அமைச்சராகவும் அதிபராகவும் மாறி மாறி பதவி வகித்து தனது இறுக்கமான பிடியில் வைத்திருக்கும் 67 வயது நிரம்பிய புட்டினின் ஆட்சிக்காலம் 2024ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றது. ரஷ்யாவின் தற்போதைய அரசியலமைப்பின்படி ஒருவர் இரண்டு தடவை மட்டுமே அதிபராகப் பதவி வகிக்க முடியும். முன்பு ஓர் ரஷ்ய அதிபரின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் என இருந்தது. அதை தனது பதவிக் காலத்தை அதிகரிக்க ஆறு ஆண்டுகளாக நீடித்தார் புட்டின்.

1999ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி ரஷ்யாவின் அதிபர் பொறிஸ் யெல்ஸ்ரின் தனது தற்காலிக தலைமை அமைச்சராக விளடிமிர் புட்டினை நியமித்தார். அப்போதைய ரஷ்யப் பொருளாதார நெருக்கடியை பொருளாதாரம் படித்தவரான புட்டின் திறமையாகக் கையாண்டதால் தனக்கு அடுத்த அதிபராக புட்டினே வருவார் என யெல்ஸ்ரின் அறிவித்தார். புட்டின் தற்காலிக தலைமை அமைச்சராக பதவியேற்ற சில நாட்களில் ரஷ்யத் தலைநகர் மாஸ்க்கோவில் உள்ள குடியிருப்பு தொடர்மாடிகளில் நடந்த குண்டு வெடிப்புக்களுக்கு காரணமாகவிருந்த செஸ்னியத் தீவிரவாதிகளுக்கு எதிராக அவர் எடுத்த கடும் நடவடிக்கைகள் ரஷ்ய மக்களிடையே அவரது மதிப்பை உயர்த்தியது.

**ரஷ்ய ஆட்சி முறைமைச் சவால்கள்**



1993ஆம் ஆண்டு வரையப்பட்ட ரஷ்ய அரசியலமைப்புச் சட்டப்படி ரஷ்யாவின் ஆட்சி முறைமை தலைவரால் நடத்தப்படும் கூட்டாட்சி குடியரசு. ஆனால் தனிமனித ஆதிக்கம், ஊழல் போன்றவற்றால் அது மாசுபடுத்தப்பட்டுள்ளது. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அதிபருக்கு அதிக அதிகாரங்கள் உண்டு. பாராளுமன்றத்தின் அனுமதியுடன் தலைமை அமைச்சரை அதிபர் நியமிப்பார். பாராளுமன்றம் இரு அவைகளைக் கொண்டது. கீழவைக்கான உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு மாநில அரசுகளும் இரு உறுப்பினர்களை மேலவையான கூட்டாட்சிச் சபைக்குத் தெரிவு செய்யும். ரஷ்யர்கள் பொதுவுடமை ஆட்சியின் கீழ் 70ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு மக்களாட்சி முறைமை பற்றிய அனுபவம் குறைவு. அதனால் ஒரு தனிப்பட்ட மனிதரின் அடக்குமுறையின் கீழ் வாழ்வது அவர்களுக்கு சிரமமல்ல. ஆனால் ஊழல் குறைந்ததும் பொறுப்புக் கூறும் தன்மை மிக்கதுமான ஒரு நிர்வாகக் கட்டமைப்பை புட்டினால் உருவாக்க முடியவில்லை. பல கட்சிகள் தேர்தலில் போட்டியிடக் கூடிய மக்களாட்சி முறைமையே ரஷ்யாவில் இருக்கின்றது. ஆனால் அக்கட்சிகள் எவ்வளவு சுதந்திரமாகச் செயற்படுகின்றன என்பது கேள்விக்குறியே. புட்டினை எதிர்த்த அலெக்ஸி நவன்லி சிறையில் அடைக்கப்பட்டார். விமர்சித்த பொறிஸ் நெமொ மர்மமான முறையில் கொல்லப்பட்டார். புட்டின் பெரும்பாலான ஊடகங்களைக் கட்டுப்படுத்துகின்றார். 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புட்டினின் ஐக்கிய ரஷ்யக் கட்சி ரஷ்யப் பாராளுமன்றத்தின் 450 தொகுதிகளில் 335ஐக் கைப்பற்றி வைத்திருக்கின்றது. பழைமைவாதத்தையும் தேசியவாதத்தையும் கலந்த கொள்கையுடைய கட்சி இரு கட்சிகளை இணைத்து உருவாக்கப்பட்டது. சில கட்சிகள் பல கட்சி முறைமை இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்காக போலியாக புட்டினால் உருவாக்கப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டையும் மேற்குலக அரசியல் ஆய்வாளர்கள் முன்வைக்கின்றார்கள்.

**புதிய அமைச்சரவை**

இருபது ஆண்டுகளாக தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கும் புட்டின் இன்னும் ரஷ்யாவின் பொருளாதாரப் பிரச்சனையை முற்றாகத் தீர்க்கவில்லை. ரஷ்யாவில் வங்குரோத்து அடையும் நிறுவனங்களின் எண்ணிக்கை 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு 57%மாக அதிகரித்திருந்தது. இருபது மில்லியன் ரஷ்யர்கள் வறுமைக் கோட்டின் கீழ் இருக்கின்றார்கள். ரஷ்யாவின் பொருளாதாரப் பிரச்சனைக்குத் தான் காரணமல்ல என்று ரஷ்யர்களுக்கு உணர்த்தும் பொருட்டு ரஷ்யாவின் முழு அமைச்சரவையையும் புட்டின் பதவி விலகச் செய்து புதிய தலைமை அமைச்சராக அதிகம் அறியப்படாத மிக்கையில் மிஷுஸ்டீனை நியமித்தார். இவர் ரஷ்யாவின் வருமானவரித்துறைக்கு பொறுப்பான உயர் அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டிருந்தவர். ரஷ்ய வருமானவரித் துறையை எண்மியமயப்படுத்தி (Dgitalization) ரஷ்ய அரச நிதியின் நிலையை சீர் செய்தவர். புட்டினின் அமைச்சரவை மாற்ற த்தை பாராளுமன்றத்தின் 434 உறுப்பினர்களில் 383 பேர் ஆதரித்து வாக்களித்தனர். யாரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. ரஷ்யாவின் பொருளாதாரத்தை சீர் செய்யும் நோக்குடனே புதிய அமைச்சரவை உருவாக்கப்பட்டது. அது 416பில்லியன் பெறுமதியான தேசியத் திட்டங்களை நிறைவேற்றப் போகின்றது. "எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் எமது நாட்டின் உலகத் தராதரத்தையும் இத்திட்டங்கள் உயர்த்தும்" என்றார் புட்டின்.

2018ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாகவும் அதிபராகப் பதவி ஏற்ற விளடிமிர் புட்டின் 2024ஆம் ஆண்டு வரை பதவியில் இருக்கலாம். அதன் பின்னர் அவரது நிலை என்னவாகும் என்ற கேள்விக்கு புட்டின் கொடுக்கும் பதில் பின்னரும் நானே வேறு வடிவில் வருவேன் என்பதாகும். ஆம் 2024இன் பின் அதிபராகப் பதவி வகிக்க முடியாத புட்டின் தலைமை அமைச்சரின் அதிகாரங்களை அதிகரிக்கும் வகையில் ரஷ்யாவின் அரசியலமைப்பைத் திருத்தப் போகின்றார். அதன் பின்னர் அவரே தலைமை அமைச்சராக இருப்பார். 2020 ஜனவரி 15ஆம் திகதி நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில் இதை வெளியிட்டுள்ளார். ரஷ்யாவின் சீர்திருத்தச் சபையின் அதிகாரங்களும் அதிகரிக்கப்படவுள்ளன. 2024ஆம் ஆண்டின் பின்னர் புட்டினே அதன் தலைவராகவும் பணியாற்றலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. புட்டினின் வலது கரமாக நீண்ட காலம் இருந்தவரும் புட்டினுக்குப் பின் அவரது இடத்தை நிரப்பக் கூடியவராகக் கருதப்பட்ட தலைமை அமைச்சர் மெட்வேடேவ் இப்போது ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

ரஷ்யாவில் ஓர் அரசியல் சீர்திருத்தம் அவசியம் என்பதை மேற்கு நாட்டினர் மட்டுமல்ல ரஷ்யாமீது மிகுந்த பற்றுள்ள ரஷ்யர்களும் கடந்த பல ஆண்டுகளாகக் கூறிவருகின்றனர். ஆட்சியாளர்களின் பொறுப்புக்கூறல் பொறிமுறைமை மேம்படுத்தப்பட வேண்டும் என்பது பலராலும் உணரப்பட்டுள்ளது. ரஷ்யப் பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரம் கொடுப்பது அதன் முதற்படி. சதுரங்க விளையாட்டிலும் குங்குஃபூ சண்டையிலும் தேர்ச்சி பெற்ற முன்னாள் உளவுத்துறை அதிபரான புட்டின் சிரியாவில் தனது நகர்வுகளைச் சாமர்த்தியமாகச் செய்து தனது எதிரிகளைத் திணறடித்தார். அதே போல் புட்டின் தனது பொருளாதார அறிவை இரசிய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு பயன்படுத்த வேண்டும். அவரது புதிய அரசியலமைப்பு சதுரங்க விளையாட்டில் அரசரைப் பாதுகாப்பான இடத்துக்கு நகர்த்தும் CASTLING போல் புட்டினைப் பாதுகாப்பான அதிகார நிலைக்கு உயர்த்தாமல் ரஷ்யர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய வகையில் அமைய வேண்டும். ரஷ்யாவின் முன்னாள் சதுரங்க உலகச் சம்பியன் கஸ்பரோவ் புட்டின் தன்னை ரஷ்யாவின் உச்சத் தலைவராக்க முயல்கின்றார் எனக் குற்றம் சாட்டுகின்றார்.

## மக்களின் வாழ் ... தொடர்ச்சி...

தற்போது அந்தத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் ஒட்டு மொத்த வாழ்வாரத்தையே இந்த திட்டம் அழித்து விடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். எனவே காவிரிப் படுகையில் 274 ஹைட்ரோ காபன் கிணறுகள் தோண்டும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

ஹைட்ரோ காபன் திட்டத்தைக் கண்டித்து தமிழகம், புதுவையில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகின்றன. புதுவையில் சமீபத்தில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் முதல்வர் நாராயணசாமி கலந்து கொண்டார். அவர் பேசும்போது, எக்காரணத்தை கொண்டும் மக்களுக்கு எதிரான எந்த திட்டத்தையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றும், சட்டசபை கூட்டத்தில் ஹைட்ரோ காபன் திட்டத்திற்கு எதிராக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் கூறியிருந்தார்.

மத்திய அரசின் இந்த அறிவிப்பு மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதாகும். மக்களின் கருத்துக்களை கேட்கவில்லை. மாநில அரசுகளின் ஒப்புதலைப் பெறவில்லை. எதேச்சதிகார நோக்கத்தோடு மத்திய அரசானது இந்த திட்டத்தை தனியார் நிறுவனத்துக்குக் கொடுத்து அவர்கள் அதை நடைமுறைப்படுத்துவற்கு நாங்களே அனுமதி அளிக்கிறோம் என்று கூறியிருப்பது மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கைக் காட்டுகிறது.

மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக ஹைட்ரோ காபன் திட்டப் பணிகள் தொடங்கப்படாமல் தாமதிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் தற்போது இதற்கு சுற்றுச் சூழல் துறையின் ஒப்புதல் பெறத் தேவையில்லை என்ற புதிய நிலைப்பாட்டின் மூலம் மத்திய அரசு மக்கள் மீது போர் தொடுத்திருக்கின்றது.

சுமார் 60 இலட்சம் மக்களின் வாழ்வாதாரங்களைப் பறித்து அவர்களை அகதிகளாக மாற்றும் இந்த நாசகார திட்டத்தை தமிழக மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். மக்களே களத்தில் இறங்கி புரட்சிகர போராட்டங்களை முன்னெடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

• • •

## கூர்மையடையும் ... தொடர்ச்சி...

கூட்டமைப்புக்கு மாற்று அணியாக உருவாகும் என எதிர்பார்க்கப்பட்ட விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைமையும் அதே போன்றுதான் உள்ளது. அதில் இணைவார் என்று எதிர்பார்க்கப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பின்னர் முரண்பட்டுக் கொண்டார். விக்கியுடன் இணைந்து செயற்பட்ட ஐங்கரநேசன் இன்று அவருடன் இல்லை. தனியாகச் செல்லப் போகின்றார். மாகாண சபையில் அமைச்சராக இருந்த அனந்தி சசிதரன் தனியான ஒரு கூட்டை அமைத்துக் கொள்வார் என்றே தெரிகின்றது. இதுபோன்ற நிலைமைகளில் மாற்று அணி என்பது ஒரு பலவீனமான அணியாகவே உருவாகும் சூழ்நிலைகள் தான் காணப்படுகின்றது.

சிங்கள பேரினவாதம் தமிழர்களுடைய இருப்பையே கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழ் தரப்பினர் ஒன்றுபட்டு அதனை எதிர்கொள்வதற்கான வியூகங்களை வகுத்துக் கொள்வது அவசியம். ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் கட்சிகளிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு முற்பட்ட பல்கலைக்கழக மாணவர் சமூகமும் பொது அமைப்புகளும் இப்போது இந்த விஷயத்திலும் தமிழ் கட்சிகளிடையே பொதுவான கொள்கையின் அடிப்படையில் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

கிழக்கில் தமிழ்க் கட்சிகளிடையே உருவாகக்கூடிய முரண்பாடுகளும், போட்டியும் எதிரிகளுக்கே வாய்ப்பானதாகிவிடும். கிழக்கு ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் உள்ளது. அங்கு கிடைக்கக்கூடிய பிரதிநிதித்துவத்தையும் இழந்துவிட்டால், தமிழர் தாயகத்தைப் பிளவுபடுத்துவது - சிதைப்பது இனவாதிகளுக்கு இலகுவானதாகி விடும். அதனால், உடனடியாக மாணவர்களும், பொது அமைப்புக்களும் இதனை ஒரு வரலாற்றுப் பொறுப்பாகக் கருதி தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

## சுமையுடன் ... தொடர்ச்சி..

நமது மூதாதையரின் வாழ்க்கைமுறையை,நம் கண்முன்னேகொண்டுவருவதாகஅமைந்துள்ளது. அவர்களதுவாழ்க்கைமுறை,பண்பாடு,கூட்டுக்குடும்பவாழ்க்கைபோன்றபல்வேறுதகவல்களை இதன்மூலம் அறியும்வாய்ப்புக்கிடைத்துள்ளது.

அந்தவகையில், பண்டைத் தமிழர் வாழ்வியலில் தாம் மட்டுமல்லாது மற்றவர்களும் சந்தோசமாக வாழ வேண்டு மென்றஉயர்ந்த நோக்கத்தில் செயற்படுகின்ற பண்பாடுகளும், மரபுகளும், மனிதர்களையும், பயன் கொடுக்கும் கால்நடைகளையும் நேசிக்கும் பண்புகளும் எவ்வாறெல்லாம் பின்பற்றப்பட்டு வந்தன என்பதன் தொடர்ச்சியை எமது இளம் தலைமுறையினராலும் பேணப்பட வேண்டு மென்பதற்காக அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறிவர வேண்டும்.

அன்று அரசர்களின் காலத்தில் அமைக்கப்பட்டிருந்த பெருங்கோட்டைகள், கொத்தளங்கள், சத்திரங்கள் என பண்டைய சின்னங்கள் சேதமடைந்து அழிந்து போன அல்லது அழியும் நிலையில், இந்த சுமைத்தாங்கி கற்கள் இன்றும் பல இடங்களில் சேதமடையாமல் இருப்பதற்கு அதன் எளிமையான தோற்றமும், கட்டட வடிவமைப்பும் பயன்பாடும் காராணமாக இருக்கக் கூடும், ஆயினும் சனத்தொகைப் பெருக்கம் காரணமாக வீதி அகலிப்புக்கள், தொழிற்சாலைகள், நவீன கட்டடங்களை அமைப்பதற்கான நிலச்சுவீகரிப்பு போன்ற அபிவிருத்தி கள் காரணமாக காணாமல் போய் விடும் ஆபத்தில், எமது மரபுரிமை அடையாளங்களில் சுமைதாங்கிகளும் ஒன்றாகி விட்டது.

பழமைக்கும்பண்பாட்டுச்சின்னத்திற்கும் சாட்சியாக திகழும் எமது கிராமங்களில் எஞ்சி இருக்கும் சுமைதாங்கிக் கற்களையும் ஏனைய மரபுரிமைச் சின்னங்களையுமாவது உள்ளூராட்சி மன்றங்களும், தொல்லியல் திணைக்களமும், மாகாணசபைகளின் சுற்றுலாத்துறை அமைச்சும், அந்தந்தக் கிராமங்களில் வாழும் மக்களும் மேலும் அழியவிடாது பாதுகாப்பது தலையாய ஒரு வரலாற்றுக் கடமையாகும்.

• • •

## ஈழத்தமிழரக்ளுக்கு ... தொடர்ச்சி..

**தமிழர்கள் வேலைப்பறிப்பால் ஒடுக்கப்பட்ட புள்ளிவிபர நூற்று வீதம் %**

| | 1956 | 1965 | 1970 |
|---|---|---|---|
| **இலங்கை நிர்வாக சேவை** | 30 | 20 | 05 |
| **எழுதுவினைஞர் சேவைகள்** | 50 | 30 | 05 |
| **ஆயுதப்படைகள்** | 40 | 30 | 01 |
| **தொழிலாளர்கள்** | 40 | 20 | 05 |
| **துறைசார் பதவிகள்** | 60 | 30 | 10 |
| **(வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள்** | | | |

தொடர்ந்து 1965இல் ஐக்கிய தேசியக் கட்சியி அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியக்கொல்ல தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகஅனுமதிக்குஎதிராகதரப்படுத்தல்முறைமையைஅறிமுகம் செய்தார். அடுத்து 1970இல் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டாட்சியின் கல்வி அமைச்சர் பதியுதீன் முகமத் அவர்கள் தமிழ் மாணவர்களுக்கு எதிரான தரப்படுத்தல் என்பதை பல்கலைகழகத் தெரிவுக்கான என்றும் தொடரும் முறைமையாகவே மாற்றினார் இதனால் பெருந்தொகையான இரண்டாந்தரக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி என்பனவற்றில் அதி திறமையான கல்வித் திறன் உள்ள ஈழத்தமிழ் மாணவ சமுதாயத்தின் அடிப்படைக் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. அன்று தொடங்கப்பட்ட தரப்படுத்தல் முறைமை காலத்துக்குக் காலம் புதுப்புது வடிவில் புதிய பெயர்களுடன் இன்று வரை தொடர்கிறது.

**உயர்தரத்தேர்வுப் புள்ளிகளைத் தரப்படுத்தியதால் ஒடுக்கப்பட்டமை 1971**

| | சிங்கள மாணவர்க்கான புள்ளிகள் | தமிழ் மாணவர்க்கான புள்ளிகள் |
|---|---|---|
| **மருத்துவம் & பல்வைத்தியர்கள்** | 229 | 250 |
| **பௌதிக விஞ்ஞானம்** | 183 | 204 |
| **உயிரியல் விஞ்ஞானம்** | 175 | 184 |
| **பொறியியல்** | 227 | 250 |
| **கால்நடை வைத்தியர்** | 181 | 206 |
| **கட்டிடக் கலைஞர்** | 180 | 194 |

இவ்வாறு இலங்கையில் அடிப்படை மனித உரிமையான கல்வி உரிமை தமிழர்களுக்குமறுக்கப்பட்டமையேதமிழ்இளைஞர்கள்தங்களின்அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்கும் உரிமையின் அடிப்படையில் முதலில் ஈழத்தமிழகம் என்ற பெயரிலும் பின்னர் தமிழீழம் என்ற பெயரிலும் தங்கள் தாயகத்தை வெளிப்படுத்தி ஈழத்தமிழர்கள் எனவும் பின்னர் தமிழீழ மக்கள் எனவும் தங்களின் சொந்த மண்ணில் தாங்கள் பாதுகாப்பான, அமைதியான வாழ்வில் வாழ உயிர், உடல், உடமை, அர்ப்பணிப்புகளுடன் முயற்சித்து வருகின்றனர். எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பதற்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை ஈழத்தமிழர்களுக்கு ஐ.நா.வின் அனைத்துலக கல்வித்தின எதிர்பார்ப்புகள் எதுவுமே என்றுமே இல்லாத அவலநிலையே தொடரும் என்பதே நடைமுறை எதார்த்தமாக உள்ளது.

• • •

# கல்வி அபிவிருத்தியில் பிராந்திய சமமின்மை

**மோஜிதா பாலு** கிழக்குப் பல்கலைக்கழகம்.

கல்வி அபிவிருத்தி என்பது கல்வி மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் மற்றும் வளங்கள் மீது முன்னேற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் கல்வியை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகள் தங்கள் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமமான வளப்பகிர்வு மற்றும் சரியான திட்டமிடல் மூலம் கல்வியை அபிவிருத்திக்கு மூலதனமாகப் பயன்படுத்துகின்றன.




அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சரியான கல்வியில் திட்டமிடலின்மை, வளப்பங்கீட்டில் சமத்துவமின்மை காரணமாக பொருளாதார ரீதியில் பின்னடைவாகக் காணப்படுகின்றன. இலங்கையில் கல்வி அபிவிருத்தியிலும் பிராந்திய ரீதியில் சமத்துவமின்மை காணப்படுகின்றது. ஒரு நாட்டில் முழுமையான கல்வி அபிவிருத்தி ஏற்படவேண்டுமாயின் பிரதேச ரீதியில் கல்வி அபிவிருத்தியடைய வேண்டும். இலங்கை கல்வி அபிவிருத்தியில் பின் நிற்பதற்கு இதுவே காரணமாகும்.



கல்வி அபிவிருத்தியிலும் பிராந்திய ரீதியில் சமத்துவமின்மையில் செல்வாக்குச் செலுத்தும் பிராதன காரணிகள்.

1. மக்கள் காரணிகள்
2. கல்வியியல் காரணிகள்
3. அரசியல் காரணிகள்
4. புவியியல் காரணிகள்

**மக்கள் காரணிகள்**

09 மாகாணங்களிலும் சனத்தொகை எண்ணிக்கையில் மாறுபாடு காணப்படுவது போல பாடசாலைகளின் எண்ணிக்கையிலும் கல்வி வலயங்களின் எண்ணிக்கையிலும் மாறுபாடு காணப்படுகின்றது.

**உதாரணம்:-**

வட மாகாணம் 971 பாடசாலைகள்- 5 மாவட்டம்

மேல் மாகாணம் 1360 பாடசாலைகள்- 3 மாவட்டம்

உயர்ந்த சிறந்த பாடசாலைகளின் பரம்பல் மேல் மாகாணத்திலும் ஏனைய சில மாகாணங்களில் நகரப்புறங்களிலும் காணப்படுகின்றமை.

**உதாரணம்:-**

மேல் மாகாணத்தில் 1971 பாடசாலைகள் காணப்படுகின்றமையும்

சர்வதேசப் பாடசாலைகள் (international schools) அதிகம் காணப்படுகின்றமையும்

பொதுவாக மாணவர் ஆசிரியர் விகிதம் 24:01 ஆக காணப்படுகின்ற வேளை இது நகர்ப்புற பாடசாலைகளில் 18:01 ஆகவும் மலையக கிராமப்புற பாடசாலைகளில் 50:01 ஆகவும் காணப்படுகின்றது.

**கல்வியியல் காரணிகள்**

- அரச மற்றும் அரச சார்பற்ற கல்வி வாய்ப்புக்கள் மேல்மாகாணத்தில் அதிகம் காணப்படுகின்றன.
- இலங்கையில் காணப்படுகின்ற 15 அரச பல்கலைக்கழகங்களில் 06 பல்கலைக்கழகங்கள் மேல் மாகாணத்திலே காணப்படுகின்றன.
- கொழும்பு பல்கலைக்கழகம்
- மோறட்டுவ பல்கலைக்கழகம்
- களனிப் பல்கலைக்கழகம்
- ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- கட்புல ஆற்றுகை பல்கலைக்கழகம்
- நாவல திறந்த பல்கலைக்கழகம்
- மேலும் கிழக்கு வடக்கு மாகாணங்களில் பல்கலைக்கழகம் காணப்படுகின்ற போதும் முக்கிய சில பீடங்கள் காணப்படுவதில்லை.

**உதாரணம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**

- கிழக்குப் பல்லைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களுக்கு பொறியியல் பீடம் வழங்கப்படாமை.
- மேல்மாகாணத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் அதிகம் வாழ்வதாலும் பொருளாதார மத்திய நிலையமாகவும் காணப்படுவதாலும் கல்விக்கான வாய்ப்புக்கள் கல்வி நிறுவனங்கள் அதிகம் குவிக்கப்பட்டுக் காணப்படல்.

**உதாரணம்**

- இலங்கை சட்டக் கல்லூரி
- ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகம்
- தகவல் தொழிநுட்ப தனியார் பல்கலைக்கழகம்
- NSBM GREEN UNIVERSITY
- இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவனம்
- NATIONAL INSTITUTE OF BUSINESS MANAGEMENT
- BUDDHIST AND PALI UNIVERSITY OF SRILANKA
- INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY
- CINEC MARTIME CAMPUS
- பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா(Technical university)
- விண்வெளி ஆய்வுக் கழகம்

போன்றவை மேல் மாகாணங்களிலே காணப்படுகின்றமை. இதனால் கிராம தோட்டப்புற மாணவர்கள் இவ்வாய்ப்புக்களை நுகரமுடியாமல் உள்ளது.

- தேசிய கல்வி நிறுவகம் அதிக கல்வி வாய்ப்புக்களை கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளுக்கு வழங்குதல் கல்வி அமைச்சகம் இலங்கை பரீட்சை அலுவலகம் கொழும்பில் காணப்படுகின்றமை.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு போன்றவை கொழும்பில் காணப்படுகின்றமை.
- இவ்வாறு தரமான கல்வி வாய்ப்புக்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டு இருப்பதால் ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு இது எட்டாக்கனியாகவும் காணப்படுகின்றது.
- இவ்வாறு கல்வியியல் ரீதியில் வளங்கள் பிராந்திய ரீதியில் சமமின்மையாகக் காணப்படுகின்றது

**அரசியல் காரணிகள்**

- இலங்கையில் காலத்திற்கு காலம் மாறிவரும் ஆட்சி மாற்றத்திற்கேற்ப கல்விக் கொள்கைகளும் மாறி வருகின்றமை கல்வி அபிருத்தியைப் பாதிக்கின்றது.
- அத்துடன் பெரும்பான்மையினரே நாட்டின் தலைமை பதவியைப் பெறுவதால் கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் பெரும்பான்மையினருக்கும் அவர்கள் வாழும் பகுதிகளுக்கும் பெரும்பகுதி கிடைக்கப்பெறல்.
- பாதீட்டில் அதிக நிதி ஒதுக்கப்பட்டாலும் தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கு குறைவான நிதிகளே கிடைக்கின்றன.
- வளப்பகிர்வில் சமத்துவமின்மை.
- கல்வி அமைச்சராகக வருபவர் தங்கள் மாவட்டத்தில் மாத்திரம் அதிக கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
- அரசியல்வாதிகள் தங்கள் பிரதேசத்தில் மாத்திரம் முன்னுரிமை அடிப்படையில் வேலை வாய்ப்புக்களை வழங்குதல்.

உயர் தொழினுப்ப வகுப்பறை (Smart class room)கொழும்பு ஜயவர்த்தனபுர மகா வித்தியாலயம் பதுளை விசாகா கல்லூரி போன்ற நகரப்புற பாடசாலைகளில் காணப்படுகி ன்ற அதேவேளை மலையகப்பாடசா லைகள் பல இடிந்து விழும் வகுப்பறைகளுடன் காணப்படுகின்றன.

- யுத்தத்திற் முன் இடைநிலைக் கல்வியில் அதாவது க.பொ.த சதாரண தரத்தில் முதன் நிலையில் காணப்பட்ட வடக்கு மாகாணம் இன்று 09 நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கும் மறைமுக அரசியல் காரணிகளே காரணமாகும்.
- ஆசிரியர் நியமனங்களில் முறையற்ற அரசியல் தலையீடு.
- திறமையான ஆசிரியர்களை அரசியல்வாதிகள் தங்கள் பகுதிகளுக்குள் நியமனம் செய்தலும்.
- முறையற்ற ஆசிரியர் இடமாற்றம்.
- போதிய கட்டிட தளபாட நூலக தொழிநுட்ப வசதிகளை பெற்றுக் கொடுத்தலும்.
- மலையக தகமையற்ற ஆசிரியர் நியமனம்.



**புவியியல் காரணிகள்**

- நாட்டில் உயர தாழ்வு வேறுபாடுகள் புவியியல் அமைப்பு போன்றவையும் கல்வி அபிவிருத்தியில் பங்கெடுக்கின்றன.
- இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகும் பாடசாலைகள்.
- மலையக பாடசாலைகள் கரையோர மலையக பிள்ளைகளுக்கு எந்தளவு தூரம் கல்வி சென்றடைகின்றது என்பது இன்றும் கேள்விக் குறியாகவே உள்ளது.
- மலையக முன்பள்ளிகளின் அதிகாரம் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தினரிடம் காணப்படல்.
- நகர மயமாக்கல் காரணமாக நகரத்தை நோக்கிய இடப்பெயர்வினால் கரையோரப் பாடசாலைகள் மூடப்பட்டும் அபாயம்.
- கூடுதல் தூரம் 10km ஒரு பாடசாலை அமைய வேண்டும் ஆனால் பெருந்தோட்டப் பகுதியில் இது சாத்தியமின்மை.

இலங்கை கல்வி அபிவிருத்தியிலும் பிராந்திய ரீதியில் சமத்துவமின்மைபக்கு மேற் கூறிய காரணிகளுடன் சமூக பொருளதார காரணிகள் வறுமை சமூக வகுப்புக்கள் என்பனவும் காரணிகளாக அமைகின்றன. இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சரியான கல்விக் கொள்கைகளுடன் சரியானகல்வித்திட்டமிடலும்அவசியமாவதுடன் அவை பிரதேச மாவட்ட மாகாண ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும்.